# திராவிடநாடு

27—8—61 | வாரவெளியீடு | விலை 16 காசு


## விடுதலை வேண்டும்


—[ கவிமணிதாசன் ]


எட்டுத் திக்கும் கொடிகட்
டியெங்கள் முந்தையர் வாழ்ந்தனர்
கட்டு மரங்களில் கடலினைக்
கடந்தவர் வாணிபம் செய்தனர்
பட்டுத் துணிகளும் பண்டங்களும்
பரப்பின ரெவனத்து வீதியில்
கொட்டிய குருதியில் நாட்டினைக்
காத்தனர் நற்புகழீட்டினர்.

ஈழம் வென்றனர்! வடபா
லிமயத் தில்விற்கொடி பொறித்தனர்!
வேழப் படைகொண் டுகனக
விசயனைப் புறங் கண்டனர்!
சோழத் துவீரர்கள் கலிங்கச்
சேனையை அதிர அடித்தனர்!
கீழை நாடுகளனைத்திலும்
கொற்ற மோங்கிட வாழ்ந்தனர்!

அன்னவர் பரம்பரை யின்று
அடிமை களாக உழல்வதா?
தென்னவன் பிள்ளைகள் தில்லித்
தர்பா ராட்சியில் வாழ்வதா?
தொன்னை பிடித்தவர் வெளி
தேசங்களில் சோற்றுக் கலைவதா?
எந்நாளு மொப்போ மிக்கொடுமை!
எந்நாட்டு விடுதலை வேண்டும்.

# மாறவில்லை

**கனகு**

வெய்யில் கொளுத்திக்கொண்டிருந்தது. சாலையோரமிருந்த அந்தப் புளிய மரத்தடியில் வந்து உட்கார்ந்தான் தலையாரி முனியன்.

"இந்த வெய்யிலிலே எங்கே போயிட்டு வர்றே அண்ணே?" என்று அந்தப் புளிய மரத்தின் மறுபுறமிருந்து குரல் வந்த பிறகுதான், அந்தப் பக்கம் பார்வையை ஓடவிட்டான் அவன். அங்கே மரத்தோடு சாய்ந்துகொண்டு மருதை உட்கார்ந்திருந்தான்.

"வேறே எங்கே! நேரே இந்த இடத்துக்குத்தான் வந்தேன். அதோ இருக்குதே கருவேல மரம், அதை ஏலம்விடப் போறோம்!"

"ஓ, அது சர்க்காரு மரமா? நானும் பார்க்கிறேன், எனக்கு நெகா தெரிஞ்ச காலத்திலேயிருந்து அந்த மரம் அப்படியேதானே நிக்கிது.,'

"ஆமாமா, அது ஊர்க் கணக்கிலேகூட ரொம்ப நாளா நின்னுக்கிட்டே இருக்குதாம். — கணக்கப்புள்ளே சொன்னாரு."

"ஆமா, அதுக்கு நீ இங்கே வந்து என்னா செய்யப்போறே இப்போ?"

"நாட்டாமைக்கார ஐயாவுக்குச் சந்தேகம்—இந்த மரம் இந்த இடத்திலே நிக்குதா, எவனாச்சும் வெட்டிக்கிட்டுப் போயிட்டானான்னு. அதுக்காக என்னைத் தொரத்தினாரு—போய் பாத்துட்டு வாடான்னு."

மருதை குபுக் என்று சிரித்தான்.

"நாட்டாமைகாரரு ஒரு நாளைக்கு ஆயிரம்வாட்டி இந்த வழியிலே போறாரு, வர்றாரு, அவருக்கே இந்த மரம் இங்கே நிக்கிறது நினைவிலே இல்லேன்னா வேடிக்கையாகத்தான் இருக்குது"

"என்னமோ வேடிக்கை! இதெல்லாம் இராசாங்க விசயம்; நமக்கெதுக்கு. சொன்னதைச் செய்ய வேண்டியதுதானே நம்ம வேலை. உம், வரட்டுமா."

எழுந்து கிளம்பினான் முனியன். அவனைத் தொடர்ந்து மருதையும் எழுந்தான்.

"அண்ணே! ஓ அண்ணே!" என்று உரக்க விளித்தது கருவேல மரத்தைப் புளியமரம்.

"ஏனப்பா" என்று சோர்ந்தாற்போல் மறுகுரல் கொடுத்தது கருவேல மரம்.

"இத்தனை நாள் பேச்சுத் துணைக்கு நீ பக்கத்திலே இருந்தே. இப்போ........."

"என்னமோ அப்பா, இன்னியோட என் ஆயுசு முடியுமோ, நாளையோட முடியுமோ என்கிற அச்சத்தோட நானும் எண்பது ஆண்டுகளுக்கு மேலே காலத்தைக் கடத்திட்டேன். இதுவரைக்கும் எனக்கு வந்த இக்கட்டுகள் எல்லாம் மலை போல வந்து பனிபோலத்தான் மறைஞ்சு போயிருக்குது. ஆனா, இனியும் என்னாலே இங்கே நின்னுக்கிட்டு வாழ்வு நடத்த முடியாதுன்னுதான் இந்தவாட்டி நினைக்கிறேன். ஏன்னா காலம் மாறிப்போச்சு பாரு!"

"ஆமா, இதுக்கு முன்னேகூட உன்னை வெட்டித் தள்ளறதுக்குத் திட்டம் போட்டாங்களா"

"திட்டம் போட்டாங்களாவது? கோடாலியும் கையுமா ஆளே வந்தாங்க. ஒருவாட்டியா, ரெண்டுவாட்டியா! பத்துவாட்டிக்கு மேலே.

"சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னே நீ நிக்கிறியே அந்தப் பக்கம் சாலை கிடையாது. அந்த இடம் வெறும் பொட்டல் காடாக்கெடந்தது. இதோ, என் ஓரத்திலேதான் சின்ன மண் சாலை ஒண்ணு பள்ளமும் மேடுமாப் போய்க்கிட்டு இருந்தது. அந்தக் காலத்திலே ஏறக்குறைய உன் அளவிலே பாதி இருப்பேன் நான். இந்தப் பக்கமும் கண்ணுக்கு எட்டின மட்டும் ஒரே பொட்டல் காடு. வழியோடு போறவங்க, வர்றவங்க எல்லாம் என் நிழலிலேதான் வெயிலுக்கு உட்கார்ந்து களைப்பாறிட்டுப் போவாங்க. ஒரு வாட்டி — தாசில்தார் ஐயா இந்த ஊருக்கு வந்தாரு. அந்த நாளில் எல்லாம் தாசில்தாரின்னா, இப்போ கவர்னருக்கு இல்லாத மதிப்பு.

அதுகூட நல்ல வெயில் காலந்தான். ஊர்க்காரங்க எல்லாம் தாசில் ஐயாவை எதிர்கொண்டழைக்க இந்த இடத்துக்கு வந்தாங்க. அதாவது என் நிழலிலே வந்து கூடியிருந்தாங்க. இளநீர் என்ன, வெள்ளரிப்பழம் என்ன, வெள்ளரிப் பிஞ்சு என்ன, தேன் என்ன, நெய் என்ன, — இன்னும் ஊரிலே கிடைக்கிற நல்ல பொருள் எது எதுவோ அவ்வளவும் கொண்டு வந்து இங்கே குவிச்சு வெச்சிருந்தாங்க. இங்கே நிழலும் நல்லா குளு குளுன்னு இருந்தது.

"தாசில்தார் வந்தார். இங்கே இறங்கினார். இறங்கினவரு பாதையிலேயே நிக்கணுமில்லே! அல்லது முள்ளு இல்லாத இடமாப் பாத்து உட்காரணுமில்லே! ரெண்டும் செய்யாமே,இந்த இடத்தை வீடு கணக்கா நெனைச்சுக்கிட்டு வழியோரமா நடை பழகினாரு. அவ்வளவுதான். ஒரு முள்ளு இருந்து காலிலே சுருக்குனு குத்திப் போட்டுது.

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 20 ] ஆண்டு சந்தா ரூ. 8 (27—8—61) தனிப்பிரதி 16 காசு [ இதழ்

# வேண்டாம் இந்த விபரீதம்!

ஒரு மொழி—அதனைப் பேசும் மக்களுக்கு **உயிர்** போன்றது. அதுபோலவே, ஒரு மொழிக்கு — அதன் எழுத்து **உயிர்** போன்றது.

உயிரற்ற உடல் எப்படி இயங்கமுடியாதோ, அது போலவே எழுத்தற்ற மொழியும் இயங்கமுடியாது.

டில்லியில் அண்மையில் கூடிய முதலமைச்சர்கள் மாநாட்டில், இத்துணைக்கண்டம் முழுவதுக்குமே ஒரு பொதுவான எழுத்தை ஏற்படுத்திவிட்டால் **எல்லாம் சரியாகப் போய்விடும்** என்ற ஒரு முடிவைச் செய்தனராம்.

இத்துணைக்கண்டத்தில் உள்ளவர்கள் பல்வேறு மொழிகளில், பல்வேறு எழுத்துக்களில் எழுதி நாட்டின் ஒற்றுமைக்கு பேரிடர் புரிகிறார்கள் என்ற முடிவுக்கு அந்தப் பெரியவர்கள் — முதலமைச்சர்கள் வந்ததன் விளைவாக எழுப்பப்பட்ட யோசனைதானும் இந்தப் பொது எழுத்து—தேவநாகரிலிபி முறை.

ஒரு மொழி என்று ஒன்று இருந்தால், அதற்கென ஒரு தனி எழுத்தும் இருக்கவேண்டுமல்லவா? அப்படி இருத்தல் ஆபத்தென்கிறது முதலமைச்சர்கள் மாநாடு!

முதலமைச்சர்கள் என்ற இடத்தை எப்படியோ எட்டிப்பிடித்து அதில் உட்கார்ந்துவிட்டால், எல்லாம் தங்களுக்குத்தான் தெரியும் என்ற போக்கில், தங்களுக் குத் தெரியாத புரியாத விஷயங்களுக்கெல்லாம் முடிவு காண முயல்வது என்பது அவ்வளவு விரும்பத்தக்க தல்ல.

மொழியைப்பற்றிய மாறுதல்கள் ஏதாவது செய்ய வேண்டுமென்றால், அத்துறையில் புலமையும் திறமை யும் பெற்ற மொழிநூல் வல்லுனர்கள் இருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை அவர்களிடம் விட்டு, அவர்கள் கூறும் ஆய்வுரைகளைக் கேட்டறிந்து அதன்படி செய் வதே ஒரு அரசு கடைப்பிடிக்கவேண்டிய முறையாகும்.

அங்ஙனம் செய்வதைவிட்டு,

எல்லாம் எங்களுக்குத்தான் தெரியும்,

என்ற போக்கில் நடந்துகொள்வது ஜனநாயகப் பண் பையே உடைத்தெறிவதாகும்.

தேவநாகரி எழுத்தில், தமிழை எழுதப் புகுந்தால் நிலைமை என்ன ஆகும் என்பதை யோசித்துப்பார்க்கும் தெளிவும் திறமையும் இருப்பவர்கள் இந்த ஏற்பாட் டைக் கேள்விப்பட்டதும் திடுக்கிட்டுப்போவார்கள்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ்மொழிக் கெனத் தனி ஒரு எழுத்து வடிவமும், அந்த எழுத்துக் களால் ஆக்கம் பெற்ற அரிய பெரிய நூல்களும் இருந்து வருகின்றன.

எடுத்துக்காட்டாகத், தமிழ் மொழியிலுள்ள திருக் குறளையோ, தொல்காப்பியத்தையோ தேவநாகரி எழுத் தில் எழுதிப்படிக்கச்சொன்னால், திருக்குறள் என்ற ஒரு நூல் தமிழ்மொழியில் கிடையாது என்று கூறக்கூடிய அளவுக்கு, அதன் பொருட்செறிவும், அமைப்பும் அற்று இல்லாதொழியும்.

டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பதுபோல், தேவநாகரி எழுத்தில், **"ஒ"** என்ற எழுத்தே கிடையாது.

எனவே, தேவையான—பொருத்தமான எழுத்துக் களை கொண்டில்லாத தேவநாகரி எழுத்து வடிவத்தைத் தமிழில் புகுத்த முனைவது முற்றிலும் பொருந்தாத— வேண்டாத—வீண் முயற்சியாகும் என்று நாம் எடுத் துக்காட்ட விரும்புகிறோம்.

> "இந்தியாவில் இன்று ஏற்பட்டுள்ள மொழிச் சிக்கலைத் தீர்க்கவேண்டுமானால், இந்தியா பல மொழிகள் பேசும் நாடு என்ற உணர்வினை நாடு பூராவிலும் உள்ள எல் லாரும் பெற்றே தீரவேண்டும். இந்த விரும் பத்தக்க—வேண்டத்தக்க உணர்வை வளர்த் துக்கொள்ளாமல், ஒரு மொழிதான் இந் நாட்டை ஆளவேண்டுமென்று எவரேனும் தன்னை வளர்த்துக்கொண்டால், அது இந் நாட்டின் மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒருக்காலும் பயன்படாது"

என்று அண்மையில் நமது நிதியமைச்சர் **சுப்பிரமணி யம்** அவர்கள் குறிப்பிட்டுப் பேசியுள்ளார்கள்.

ஒரு மொழிதான் இந்நாட்டை **ஆளவேண்டுமென்று நினைப்போர் உண்மையிலேயே சிக்கலை வளர்ப்போர் ஆவார்** என்று அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது முற்றிலும் பொருத்தமானதாகும்.

எனவே, ஒரு மொழி, ஒரு எழுத்து என்பதெல்லாம் நடைமுறைக்கு ஒத்துவரா என்று கூறி இந்த வேண் டாத—விரும்பத்தகாத விபரீத முயற்சியில் இனியும் முனையவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

"முள்ளு குத்தினதும் என்னை வெறித்துப் பார்த்தாரு தாசில்தாரு. என்மேலே அந்த வேளை அவருக்கு ஆத்திரம், ஆத்திரமா வந்துவிட்டது. 'இந்த மரத்தை உடனே வெட்டி எறிஞ்சுட்டுத்தான் மறுவேலை பார்க்கணு'மின்னு உத்தரவு போட்டாரு.

"நாட்டாமைக்காரரு பதறிப் போனரு. அப்பவே கோடலிக்காரங்களுக்கு ஆள் விட்டாரு. வெட்டியானும், தண்டல்காரனும் வரிந்து கட்டிக்கொண்டு என் தூரிலே பள்ளந் தோண்டக் கிளம்பிட்டாங்க.

"அப்போதான் அந்த அதிசயம் நடந்தது" என்று வேலமரம் தன் பேச்சை நிறுத்தியது.

"என்ன அதிசயம்?" என்று வியப்பு மேலிடப் புளியமரம் ஆவலுடன் வினவியது.

"அதாவது என் தூரிலே பள்ளம் பறிச்சாங்கன்னு சொன்னேன் இல்லே. அப்படிப்பறிச்ச இடத்திலே ஒரு வளை இருந்தது. அந்த வளைக் குள்ளே ஒரு நாகபாம்பு. பள்ளத்தைப்பற்றிக்க நாகபாம்பு உஸ்ஸின்னு சீறிக்கிட்டு மேலேகிளம்பி வந்தது. அவ்வளவுதான். வெட்டியானும் தலையாரியும் கதிகலங்கிப் போய் ஒதுங்கிக்கிட்டாங்க. தாசில்தார் அந்த நாகபாம்பைப் பார்த்தாரோ, இல்லியோ—ஒரே ஓட்டமா ஓடத்தொடங்கிட்டாரு. முள்ளுணும் பார்க்கலே; கல்லுணும் பார்க்கலே!"

"அப்புறம்?"

"அப்புறம் என்ன. என்னை வெட்டிச் சாய்க்கிற நினைப்பையே எல்லாரும் விட்டுவிட்டாங்க. என் அருகாமையிலே வந்துபோறவங்க எல்லாம் பக்தி சிரத்தையா கும்பிடு போடத்தொடங்கிட்டாங்க."

"ஆனால், அந்தத் தாசில்தார் என்ன செய்திருக்கிறர் தெரியுமா? ஏட்டிலே என்னைப் பத்தி ரொம்பப் பயங்கரமா எழுதி வெச்சுட்டுப் போயிருக்கிறரு. அந்தக் குறிப்பைப் பார்த்துட்டு பின்னுலே வந்த தாசில்தாருகள்கூட எத்தனையோ வாட்டி என்னை வெட்டிச் சாய்க்கிறதுக்கு திட்டம் போடத்தான் செய்தாங்க. ஆனல், ஒவ்வொருவாட்டியும் ஏதோ ஒண்ணு தடங்கலாவந்து குறுக்கே நின்னுடும். அதோட, வழியும் இந்தப்பக்கம் இல்லாமல் போச்சு. அது எனக்குப் பின்னும் பாதுகாப்பாகி விட்டது. யாரும் என்னைப் பத்திக் கவனிக்கிறதுக்குத் தோதுகிடைக்கல்லே. எப்படியோ இத்தனை காலத்தையும் தள்ளிக்கிட்டு வந்துட்டேன்."

"இந்தவாட்டி உனக்கு நம்பிக்கை இல்லே. வெட்டியே தீர்த்துடுவாங்க அப்படித்தானே?"

"ஆமாம், ஏன்னு, இப்போ காலம் மாறிப்போச்சு! பக்தி குறைஞ்சுப் போச்சு. ரொம்பப்பேருக்குத் தெய்வ நம்பிக்கையே இல்லே. சாத்திரம், சம்பிரதாயம் இதுகளிலே பிடிப்பு இல்லே! ஒருத்தன் இல்லாட்டி ஒருத்தன் துணிஞ்சு என்னை வெட்டிச் சாய்ச்சுடுவான்"

"அண்ணே, நீ நினைக்கிறதுதான் தப்பு. இன்னும் அதெல்லாம் ஒண்ணுமே மாறிப்போகலே! எல்லாம் பழையபடிதான் இருக்குது. ஆள் தான் மாறியிருக்கிறங்க. முறை தான் மாறியிருக்குது. நினைப்பு, நம்பிக்கை, பழைய குருட்டுப்போக்கு, வேற்றுமை இதுகள் எல்லாம் இன்னும் அப்படியேதான் அசல் அழியாமல் இருக்குது" என்று மூன்ருவது குரல் ஒன்று கேட்டது. வேலமரத்தில் கூடுகட்டி வாழ்ந்துவரும் சிட்டுக் குருவிதான் அப்படிப் பேசியது.

"என்னமோ அப்பா, நாட்டு நடப்பைக் கவனிக்கிறப்போ, எல்லாமே மாறிப்போன மாதிரிதான் எனக்குத் தென்படுது"

"சும்மா தென்படுவதையெல்லாம் உண்மை என்று எடுத்துக்கொள்ள முடியாது அண்ணே! தென்படுவது வேறே! நடைமுறை வேறே! பழைமை மாறவில்லை; வைதிகப் பிடி தளரவில்லை; சாதி இல்லை, தீண்டாமை இல்லை என்பதெல்லாம் வெறும் பேச்சளவோடுதான் இருக்கிறது. நடைமுறையில் இல்லை. தீண்டாமையை ஒழித்துவிட்டோம் என்று மேடையதிரப் பேசுவார். அவரே தம்முடைய வீட்டுக்கு வந்து விட்டால், தெருவோரத்தில் அவர் பண்ணையில் வேலை செய்யும் காத்தானைக் காண்பார். காத்தான் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்தவன். வந்தவனுக்குக் கஞ்சி ஊற்றச் சொல்லி இல்லக்கிழத்தியிடம் கட்டளையிடுவார். அந்த அம்மையார் தமது அடுக்களை ஆளிடம் பழைய கஞ்சியை ஒரு கலயத்தில் கொண்டுபோய்த் தெருவில், காத்தானைக் குந்தவைத்து எட்டி நின்று ஊற்றச் சொல்லுவார்கள். இது இன்றைய நாட்டின் நிலைமை!" என்று சிட்டுக்குருவி மேலும் விளக்கமுரைத்தது.

"நீ என்னமோ, சூட்சுமமாப் பேசறே! எனக்கு அது ஒண்ணுமே புரியல்லேப்பா!" என்று அலுத்தாற் போல் கூறியது வேல்மரம்.

"சொன்னுப் புரியாது. நாளைக்குக் கண்ணுலேயே பார்க்கலாம். கொஞ்சம் பொறுத்திரு" என்று சிட்டுக்குருவி சொல்லிவிட்டு அவ்விடமிருந்து பறந்துபோய்விட்டது. புளியமரமும், வேலமரமும் பேசுதற்கு ஒன்றும் தோன்ருமல் மௌனமாக நின்றன.

மறுநாள் வேலமரம் ஏலம்விடப் பட்டது. ஊர்ப் பெரியதனக்காரே அதை ஏலம் எடுத்துக்கொண்டார். உடனே கோடரிக்காரர் இருவரை அவர் அழைத்துவந்தார். விரைவில் தங்கள் வேலையை முடிக்கவேண்டும் என்ற தீவிரத்தோடு அவர்கள் செயலில் முனைந்தார்கள். மரத்தடியை நன்ருகப்பறித்துக்கொண்டு ஒருவன் கோடரியை ஓங்கினன். அவ்வளவுதான் 'ஆ' என்ற ஒலியுடன் கோடரியைக்கீழே போட்டு விட்டு அவன் அப்படியே உட்கார்ந்துவிட்டான். அவன் ஓங்கிய கோடரி மரத்தின்மீதுபடவில்லை. அவன் காலில்பட்டுவிட்டது—தக்க வேளைபார்த்துக் குறுக்கே பறந்த சிட்டு தன் சிறகு நிறையச் சேர்த்து வைத்திருந்த புழுதியைக் கோடரிக்காரன் கண்களில் தூவிவிட்டது. சட்டென்று அவன் கண்களை மூடவே ஓங்கிய கோடரி மரத்திற் படாமல் அவன் காலிற்பட்டது.

ஓடிவந்தார் பெரியதனக்காரர்.

"சேச்சே! என்ன அபசகுனம். முதல்முதல் கலப்பைக்கு மரம் வெட்ட வந்தால் தடையேற்பட்டு விட்டதே! — சரி சரி, மரமும் வேண்டாம், ஒன்றும்வேண்டாம். வாருங்கள் போகலாம்."

சினத்தோடு கிளம்பினர் பெரியதனக்காரர். கோடரிக்காரர்களும் நடந்தனர்.

சற்று நேரத்துக்குள் அங்கே வட்டமிட்ட சிட்டு கலகலவென்று சிரித்தது.

புளியமரமும், வேலமரமும் பேசுதற்கு ஒன்றும் தோன்ருமல் மௌனமாக நின்றன.

★

# மீண்டும் இந்தி!

# திரண்டெழுங்கள் திராவிடரே!

அண்மையில், டெல்லியில் கூடிய முதலமைச்சர்கள் மாநாட்டில் விவாதிக்கப்பட்ட, இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளுக்கும் தேவநாகரி வரி வடிவத்தை ஏற்படுத்துவது பற்றிய எண்ணம், பொதுவாகத் தென்னகத்திலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் நியாயமாகவும் இயல்பாகவும் எழக்கூடிய பெருந்திகிலுக்குக் காரணமாக அமைந்துவிட்டது.

இந்தி ஏகாதிபத்தியத்தின் மிரட்டல் இன்னும் ஒழித்துத் தீர்ந்தபாடில்லாமல், பதுங்கி ஒளிந்து வாழ்ந்து, எவ்வெப்பொழுது வாய்ப்பு நேருகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் பேருருக்காட்டி தென்னக மொழியையும், கலாசாரத்தையும் அச்சுறுத்தி நசுக்கிக்கொண்டு வருகிறது—என்று நீண்டகாலமாக இங்கு நிலவிவரும் கருத்தைத்தான்! திட்டமிட்டுச் செய்யப்படும் இந்த முயற்சி உறுதிப்படுத்துகிறது.

தென்னகம்—குறிப்பாகத் தமிழ்நாடு, பல்லாண்டுகளாக இதை எதிர்த்துப் போராடி வருவதுடன், தென்னகத்தின் தேசிய சுயமரியாதையை அழிக்கும் நோக்குடன் செய்யப்படும் எந்த ஆதிக்க முயற்சியையும் எதிர்த்து இறுதிவரை போராடவும் முடிவுசெய்துள்ளது.

இந்தி, ஆட்சிமொழியாகத் திணிக்கப்பட மாட்டாது என்றும், அது சம்பந்தப்பட்ட அரசியல் சட்டவிதி செயலாக்கப்படுவதில் காலந்தாழ்த்தப்படும் என்றும் தலைமை அமைச்சரிடமிருந்து உறுதிமொழி பெற்றிருந்தும், தேவநாகரி வரி வடிவத்தை ஏற்படுத்துவது பற்றிய எண்ணம் இந்தி வெறியர்களால் உண்டாக்கப்படும் கொல்லைப்புற வழியாக இருக்குமோ என அஞ்சுகின்றோம்.

**நமது மாநிலக் கல்வியமைச்சர் அவர்கள், தேவநாகரி எழுத்துமுறை திணிக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழி கூறுவதன்மூலம் பொதுமக்களின் அச்சத்தைப் போக்க முன்வந்தபோதிலும், அமைச்சரின் உறுதி மொழியில் நாம் அவ்வளவாக நம்பிக்கைக்கொள்ளமுடியாது. ஏனெனில், அவர்களுடைய (அமைச்சர்களுடைய) கடந்த கால செயல்கள் சில அப்படிப்பட்டனவாக இருந்திருக்கின்றன.**

எனினும், இத்தகைய தீங்குபயக்கும் முயற்சி குறித்துப் பொதுமக்கள் கொண்டிருந்த கருத்தை உரிய நேரத்தில் கணித்தறிந்துகொண்ட கல்வியமைச்சருக்கு நன்றி செலுத்துகிறோம். அதேபோது,

**இந்தி வெறியர்களின் மிரட்டலுக்குத் தலைமையமைச்சர் அவர்கள் பெரும் அளவில் பலியாகியிருப்பதைக் காண அதிர்ச்சியுறுகிறோம்.**

இத்தகைய ஒரு முயற்சிக்கு தென்னாடு முழுவதும் எதிராகஇருக்கும் என்று, சம்பந்தப்பட்டவர்கட்கு எச்சரிக்கை விடுகிறோம்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவை திராவிட இனத்தின் தொன்மையான வளமிக்க மொழிகளாகும். திராவிட மக்களின் கலாசாரச் சுதந்தரத்தைக் காப்பாற்ற தென்னகம் உறுதிபூண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் தலைசிறந்த அறிஞர்களால் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ள கண்டனங்களையும் கவனத்தில்கொண்டு, முதல் அமைச்சர்கள் மாநாட்டில் விவாதிக்கப்பட்ட யோசனை உருவாக்கியுள்ள ஐயத்தையும் அச்சத்தையும் உடனடியாக அகற்ற முன்வரவேண்டும் என்றும் தலைமையமைச்சரைக் கேட்டுக்கொள்கிறோம்.

**தங்களுக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சியையும் அச்சத்தையும் உடனடியாகத் தலைமையமைச்சருக்குத் தெரிவித்து, இத்தகைய எந்த முயற்சியும் நடைபெறுமல் தடுத்து நிறுத்துமாறு தென்னுட்டின் தனித் தன்மையையும் சுயமரியாதையையும் காப்பாற்றுவதில் மிக அக்கறைகொண்டுள்ள அனைவரையும் தி. மு. கழகம் கேட்டுக்கொள்கிறது.**

அழைப்புக் கிடைக்கும்போது, இந்த அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடி ஒழிப்பதற்கு, கழகக் கொடியின் கீழ் அணிவகுத்து நிற்க ஆயத்தமாகுமாறு திராவிட முன்னேற்றக் கழகம் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறது.

அண்ணாதுரை

பொதுச்செயலாளர், தி. மு. க.

# சீக்கிரம் செய்க!

சீக்கியர்களின் தலைவர் மாஸ்டர் தாராசிங் உண்ணுநோன்பு இருந்து வருகிறார். சீக்கியர்களின் நலனுக்குத் தனிப் பஞ்சாப் மாநிலமே சிறந்த முடிவு என்பதைக் கடந்த பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்துள்ளார். அவருடைய தலைமையிலும் கருத்திலும் சீக்கியர்கள் அசையாத நம்பிக்கை வைத்து, அவர்காட்டும் வழிநடந்து வருகின்றனர். மக்களுடைய பேராதரவு அவர்க்கு இருக்கிறது என்பது ஐய மற வெளிப்பட்டுள்ளது.

எனவே, அவர் சொல்வதை எவர் கேட்பர் என்று தள்ளிவிடுவதற்கு இல்லை. அந்தப் பெரியவர், தன் கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லை என்பதால் கடைசிப்புகலாக உண்ணு நோன்பை மேற்கொண்டுள்ளார்.

இந்த நேரத்திலும் மத்திய அரசு வீண்பிடிவாதமும், முரட்டுத்தனமும் காட்டிவருவது வருந்தத்தக்கது ஆகும். மத்திய அரசின் பிடிவாதம் பெயர்பெற்றதாகிவிட்டது. நியாய அநியாயம் பார்ப்பது இல்லை, முடியாது என்று மூச்சைப்பிடித்துக் கொண்டிருப்பது அதன் வழக்கமாகிவிட்டது. ஆந்திர மாநிலம் வேண்டும் என மக்கள் ஆர்வத்தோடு கேட்டார்கள்; மத்திய அரசு மாட்டேன், மாட்டேன் என்று மறுத்துக் கொண்டேவந்தது. பிடிவாதம் பிடித்தது. ஆத்திரம் கொண்ட மக்கள்—பொட்டி ஸ்ரீராமுலு பிணமானபிறகு—ஆர்த்து எழுந்தனர். நாட்டில் அமளி எழுந்தது. மூடியிருந்த கண்களைத் திறந்துபார்த்து "ஆந்திரம் அமையும் அன்பர்களே! ஆத்திரம் வேண்டாம்" என்ற வேண்டுகோள் டெல்லியிலிருந்து கேட்டது. மராட்டிய மக்கள் தங்கட்கென மாநிலம் கேட்டுக்கேட்டு, கோரிக்கை மறுக்கப்பட்டு மறுக்கப்பட்டு வந்ததினால் வீறுகொண்டு எழுந்தனர். வெற்றியைப் பெற்றே தீருவது என்று வெறிகொண்டு பாடுபட்டனர். நேருவுக்கு மதிப்பும் மரியாதையும் அளித்துவந்தவர்கள், அவற்றை அடியோடுகைவிட்டுவிட்டுக்கொதிப்பும் கொந்தளிப்பும் கொண்டவர்களாக ஆனார்கள். பின்னரே 'மராட்டியம்தானே–அமையும், அமையும்' என்று மத்திய அரசு பிடிவாதம் வீட்டு ஒப்புக்கொண்டது.

அலட்சியப்படுத்துவது, கேலி பேசுவது, கூடாது என்பது, முடியாது என்பது என்று எப்பிரச்சினையிலும் இப்படிச் சில கட்டங்கள்—இதனால் ஏற்படும் நெருக்கடிகள், சங்கடங்கள் இவற்றைக் கண்ட பிறகு, இனி மறுக்க இயலாது என்ற நிலை வந்துவிடுவதைக் கண்டபிறகு, 'அப்படியே ஆகட்டும்' என்று தலையாட்டுவது, இதுவே மத்திய அரசின் போக்காக இதுவரை இருந்து வருகின்றது. தட்டிக்கேட்டாலே தக்கது கிடைக்கும் என்றநிலை வந்து விட்டது.

சீக்கியர் பிரச்சினை சிக்கலாகி விட்டதற்கும் இதுவே காரணம். தாராசிங்தானே—தனியாள் — யார் துணை அவர்க்கு என்ற அலட்சியம், தாராசிங் கேட்பது என்ன என்று கேட்டீர்களோ என்ற கேலி, அவர் கேட்பது கூடாது என்ற மறுப்பு—முடியாது என்ற தீர்ப்பு — இப்படிப் பல கட்டங்களை நடத்தினார்கள். மக்களின் மனத்தில் இருந்த எண்ணத்திற்கு, எழுச்சிக்கு ஒரு உருவமாகத் தாராசிங் விளங்கி வருகிறார் இன்று. அவரே தங்கள் தலைவர்—அவர் வழி நின்று வாழ்வு பெறுவோம் என்று சீக்கியர்கள் சிந்து பாடி நிற்கின்றனர். இந்த நிலையில் தாராசிங்கின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. உண்ணு நோன்பு நீடிக்கிறது.

அந்த நல்லவரின் கோரிக்கையைச் செவிமடுத்து ஆவனசெய்து தரவேண்டியது மத்திய அரசின் கடமையாகும். அலட்சியமாக இருந்துவிட்டு, அமளி மூண்டுவிட்ட பிறகு அடிவயிற்றைப் பிசைந்து கொண்டு ஆகப்போவது ஒன்றும் இல்லை. சீக்கியரிடையே மட்டுமின்றி, நாடு முழுதும் இன்று அந்தப் பெரியாரின்பால் அன்பு பெருகி நிற்கிறது. எனவே மத்திய அரசினர் தங்கள் பிடிவாதத்தைத் தளர்த்தி, பிறகு செய்வதை முன்னதாகச் செய்துவிடவேண்டும். வறிதே சாக்கும் போக்கும் காட்டி, பிரச்சினையை வளரவிடுவதினால் பெற இருக்கும் பயன் ஒன்றும் இல்லை.

தாராசிங் மட்டுமா? அவர்க்கு எதிராகக்கூட ஒருவர் உண்ணுநோன்பு இருக்கிறாரே—அவர் பிரச்சினையைத் தீர்க்கவேண்டாமா? என்று மத்திய அரசினர் கேட்கக்கூடும். தாராசிங்குக்கு எதிர்ப்பாக உண்ணுநோன்பு மேற்கொண்டிருப்பவர் அரசியலில் எந்த அளவு தொடர்பு உடையவர்! அவர் கருத்துக்களுக்கு மக்கள் மன்றத்திலே இடம் இருக்கிறதா என்ற இவற்றை முதலில் எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு பெரிய சமுதாயத்தின் தலைவரை — மக்களிடையே மாண்பும் மதிப்பும் மிகப் பெற்றுள்ள ஒருவரை எதிர்ப்பதே தனக்குப் பெருமை என்று கருதி, யாரேனும் ஒருவர் தானும் 'அது போல் 'விரித்து ஆடினால்' அதை அப்படியே மதிக்கவேண்டும் என்பது நீதியும் ஆகாது; நேர்மையும் ஆகாது; அது நடைமுறைக்கும் ஒவ்வாதது.

தாராசிங் தனி மனிதர் அல்லர். ஒரு பெரிய கருத்தைப் பக்கபலமாகக்கொண்டு அவர் போராடி வருகிறார். அந்தப் போராட்டத்தில் எது வரினும் ஏற்கலாம் என்ற துணிவில் பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் தங்கள் வாழ்வை ஈடுவைத்துப் பாடுபட்டு வருகின்றனர். உயிர்ப் பிரச்சினையாக ஒரு இனத்தவர்க்கு இருந்து வரும் ஒன்றினை உதாசீனம் செய்வது என்பது அறிவுடைமை ஆகாது. 'போட்டி உண்ணுநோன்பு' என்பது நாடகமாக, கேலிக் கூத்தாக இருக்குமேயன்றி, அதற்குஆதரவோ அநுதாபமோ பிரச்சினையைப் புரிந்துகொண்டவர்களிடமிருந்து கிடைக்காது என்பது திண்ணம்.

இதிலே கட்சிப்பாகுபாடோ, வேறு நோக்கக் குறுக்கீடுகளோ, தலையிடுதல்நல்லதல்லஎன்பதைச்சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரி அவர்களும் எடுத்துக்கூறி, இதனால் ஆபத்து ஒன்றும் வந்துவிடாது என்பதை எடுத்துக்காட்டி, சீக்கியரின் கோரிக்கையை நிறைவேற்றவேண்டும் என்று கூறியுள்ளார்.

எனவே, மனக்கசப்புகளை வளர்க்காமல், மாச்சரியங்களுக்கு இடம் தராமல், உடனடியாக இந்தப் பிரச்சினையில் நல்ல முடிவு கண்டு மக்கள் மன்றத்திற்கு மதிப்பளிக்க வேண்டுவது இந்திய அரசினரின் கடமையாகிறது.

# அரசியல் வரலாறு

பெஸ்கி முகம்மது, எம். ஏ.,

கிரேக்க அறிஞனும் சிறந்த தத்துவ மேதையுமான அரிஸ்ட்டாடில் முதன் முதலாகத் தான் எழுதிய புத்தகத்திற்கு 'அரசியல்' என்ற பெயர் கொடுத்தார். முதன் முதலாக 'அரசியல்' என்று அரிஸ்டாட்டிலினுல் அழைக்கப்பட்ட அந்தச் சொல், இன்றையதினம் உலகத்தின் பெரும் பகுதியினர் உச்சரிக்க வேண்டிய ஒரு வழக்கச் சொல்லாகக் கருதப்பட்டு வருகிறது. 'பாலிடிக்ஸ்' (Politics) என்ற அந்த ஆங்கிலச் சொல் கிரேக்கச் சொல்லான 'போலிஸ்' (Polis) என்பதனின்று எடுக்கப்பட்டது. கிரேக்க மொழியில் 'போலிஸ்' என்பதற்கு நகரம் என்று பொருள். பண்டைக் காலத்தில் அரசியல் அறிவு வழங்கிய நாடுகளில் கிரேக்கம் முதலிடம் பெறுகிறது. கிரேக்கர்கள் ஸ்பார்ட்டா, ஏதன்ஸ் போன்ற சிறு சிறு நகரங்களில் வாழ்ந்து வந்தார்கள். ஒவ்வொரு நகரத்திலும் மிகச் சொற்பமான அளவு மக்கள்தொகை இருந்து வந்தது. ஒவ்வொரு கிரேக்கனுக்கும் அவனது நகரமே அவனுடைய நாடாக இருந்து வந்தது. என்வே, 'போலிஸ்' என்ற அந்த நகரத்தின் நலத்தைப்பற்றிய குறிப்புக்கள் 'அரசியல்' என்று கருதப்பட்டு வந்தன. ஆனுல் இன்றைய தினம் 'அரசியல்' என்பது ஒரு நகரத்தையல்லாது, பல நகரங்கள் சேர்ந்த ஒரு நாட்டைப்பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது கூறப்படுகிறது. ஒரு நாட்டின் அன்ருட அரசியல் பிரச்சினைகளும் அந்த நாட்டு அரசாங்கத்தின் ஆட்சி முறைகளுமே அரசியலாகஇன்று கருதப்படுகிறது. ஒரு நாட்டின் நிகழ்கால அரசியலை வைத்து எதிர்கால அரசியலை எடைபோடுவதற்கு இறந்தகால அரசியல் தத்துவங்களின் வரலாறு (Political Philosophy) தேவைப்படுகிறது. இந்த நாடு எப்படி இருந்தது? அன்று எப்படிக் கொடிகட்டி ஊர்மெச்ச வாழ்ந்தது? பின்பு எப்படி மண் மேடாய்ச் சரிந்துபோனது! அதற்குண்டான அரசியல் தத்துவத்தின் வரலாறு என்ன என்பதை ஊன்றிப் படிப்போர் ஒரு நாட்டின் எதிர் காலத்தை எளிதில் கணக்கிட்டு விடுவர். ஒரு நாட்டின் அரசியலைப் பற்றிப் படிப்பதற்குத் தனி மனிதனுக்கு அரசியல் அறிவு தேவையா என்று பலர் வினு எழுப்பக்கூடும். விஞ்ஞான அறிவு, பொருளியல் அறிவு, தொழில் நுணுக்க அறிவு போன்றவைதானே மனிதனுக்குத் தேவை. அரசியலறிவு மனிதனுக்கு தேவை இல்லையே என்றும் பலர் கேட்கலாம். உயிர் உடலுக்கு எத்துணை முக்கியமோ, கரை கடலுக்கு எத்துணை அவசியமோ அத்துணை முக்கியம் அரசியல் அறிவு மனிதனுக்கு. உலகில் தோன்றியிருக்கின்ற எல்லா முக்கிய கலைகளுக்கும் அரசியலுக்கும் அன்றிலிருந்து இன்றுவரை தொடர்பு இருந்து வந்திருக்கிறது. அரசியலும் மனித இன வரலாறும் (Anthropology) ஆரியர், திராவிடர், மங்கோலியர் போன்ற இனவாரியாக மனித சமுகத்தின் வேறுபாட்டை அவனுடைய சூழ்நிலைகளுக்கேற்பப் பூகோள ரீதிக்கு ஏற்ப விளக்கிக்கூறுவது மனித இன வரலாறு. மனித இன வரலாற்றை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுதுஆரிய, திராவிட, மங்கோலியர் போன்ற பல இனங்கள் நமக்கு தெரியவருகின்றன. ஒரு இனத்தைச் சேர்ந்த மக்கள் அந்தப் பகுதியின் தட்பவெட்ப நிலைகளுக்கு ஏற்ப அந்தப் பகுதியின் சூழ்நிலைக்கு ஏற்பத் தங்கள் அரசை அமைத்துக் கொண்டார்கள். இந்த இன வரலாற்றை வைத்துக்கொண்டு ஒரு நாடு எவ்வாறு உண்டானது என்று நாம் கண்டுகொள்ளமுடியும். இயற்கையிலே மனிதனுக்கு தன் இரத்தத்தோடு கலந்த ஒரு இன உணர்வு இருக்கிறது. இரண்டாவது, மனிதன் சூழ்நிலைக்கேற்பத் தனது வளர்ச்சியை அடைகிருன். ஒரு மனிதனுடைய அரசியல் செயலாற்றும் தன்மை (Political Behaviour) பெரும்பாலும் இந்த இரண்டு குணங்களின் அடிப்படையில்தான் எழுகின்றது. உதாரணமாக, மனித இன வரலாற்று நூலை நாம் புரட்டிப்பார்க்கின்றபொழுது, தென்னிந்தியாவில் உள்ள தெலுங்கு பேசும் ஆந்திரரும், மலையாளம் பேசும் மலையாளிகளும், கன்னடம் பேசுவோரும், தமிழ் பேசுவோரும் திராவிட இனத்தை சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகின்றது. ஒரே இனமுள்ள ஒரு வ்குப்பாரும், ஒரு நிலப்பரப்பில் உள்ளவர்களும் தான் பலமான அரசியல் ஒற்றுமை உணர்ச்சியில் ஒன்றுபட முடியும் என்பது போன்ற பல தெள்ளிய உண்மைகளை இந்த மனித இன வரலாறு அரசியல் வாழ்க்கைக்குச் சுட்டிக் காட்டும். அரசியலும் வரலாறும் அதேபோன்றுதான் அரசியலுக்கும் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு மிகமிக நெருக்கமானது. அரசியல் இன்றேல் வரலாறு இல்லை; வரலாறு இன்றேல் அரசியல் இல்லை. வரலாறு என்பது அந்தந்தக் காலங்களில் நடந்த சம்பவங்களின் தொகுப்பு ஆகும். இந்த ஆண்டில் இந்தச் சம்பவம் நடந்தது என்பதை வரலாறு காட்டும். உதாரணமாக 1688-ம் ஆண்டு மன்னனை எதிர்த்து

இங்கிலாந்தில் பெரும் புரட்சி ஒன்று நடந்தது. அந்தப் புரட்சிக்கு மூல மான காரணங்களை வரலாறு எடுத் தியம்பும். அதுபோன்று பிரான்சில் நடந்த பிரெஞ்சுப் புரட்சியின் கார ணங்களையும் சம்பவங்களையும் வர லாறு தெளிவுறக் காட்டும். இரண் டாவது உலக மகா யுத்தம் ஏற்படு வதற்கு உண்டான காரணங்களை யும், போர் முறையைப்பற்றியும் வர லாறு நமக்கு காட்டும். ஆனால், அந்த வரலாற்றிலிருந்து அரசியல் முக்கியத்துவத்தை அரசியல்தான் காட்ட முடியும். 1688-ம் ஆண்டு மன்னனை எதிர்த்து நடந்த புரட்சி யின் காரணமாக 'சட்டத்திற்குட் பட்ட மன்னராட்சி' என்ற அரசியல் அமைப்பு முறை ஏற்பட்டதை அரசி யல் விளக்கும். அதுபோலவே பிரெஞ்சுப் புரட்சியின் பயனாக மன் னர் ஏதேச்சதிகாரம் சாய்ந்து மக்க ளாட்சி என்று அரசியல் கருத்து வளர்ந்ததை அரசியல் தெளிவுபடுத் தும். இரண்டாவது உலகப் பெரும் போர் நடைபெற்றது என்று வர லாறு கூறுகின்றபொழுது, அது ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத் திற்கும் நடந்த போராட்டம் என்று தத்துவரீதியாக அரசியல் விளக்கம் தரும். எனவே, அரசியலும் வர லாறும் ஒன்றுக்கொன்று தொடர் புடையன என்பது புலனாகின்றது.

இதுபோன்றே அரசியலுக்கும் பொருளியலுக்கும் தொடர்பு இருக் கின்றது. பொருளாதாரத்தை "அர சியல் பொருளியல்" என்று கிரேக் கர்கள் அழைத்ததிலிருந்தே, பொரு ளியலுக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பை நாம் அறியலாம். ஒரு நாடு தனக்கென ஒரு அரசியல் வழியை வகுத்துக்கொள்வது அந்த நாட்டு மக்கள் உண்ண உணவும், இருக்க இடமும், உடுத்த உடையும் குறைவறக் கொடுப்பதற்குத்தான். பொருளியல் நிலையில் தன் நாட்டு மக்கள் மேலான நிலையில் வீற்றி ருக்க நல்ல அரசியல் தேவைப்படு கிறது. மக்களைத் திருப்திபடுத்த முடி யாத நல்ல அரசியல் அமைப்பு இல் லாத ஒரு நாட்டில், புதுப்புது அரசி யல் தத்துவங்கள் பொருளாதாரத் தைச்சீர்படுத்துவதற்காகத்தோன்ற லாம். உதாரணமாக இரஷ்யாவின் பொருளியல் நிலைமையை ஏழை பணக்காரன் ஏற்றதாழ்வைப் போக்க முடியாத ஒரு அரசியல் அமைப்பு இருந்த காரணத்தால், கம் யூனிச அரசியல் தத்துவத்தை மக் கள் ஏற்றுக்கொண்டு பழைய அர சியல் அமைப்பை மாற்றிவிட் டனர். இந்தியாவை இங்கிலாந்து அடிமைப்படுத்தி ஆண்டுவந்த காலத்தில் அவர்கள் ஏற்படுத்திய அரசியல் அமைப்பு, நம்மைப் பொரு ளாதாரத்தில் சுரண்டுவதற்கு ஏற்ப அமைக்கப்பட்டது. அரசியல் கருத் துக்களும் தத்துவங்களும் உண்டா வதற்கு காரணம், ஒரு நாட்டின் பொருளியல் நிலைதான். பொரு ளாதார பாகுபாட்டை, ஏழை பணக் காரன் வேறுபாட்டை ஒழிக்கக்கிளம் பிய புதிய அரசியல் தத்துவம்தான் சோஷியலிசம் என்று அழைக்கப் படுகிறது. 19வது நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஜனநாயகம் என்ற அரசியல் தத்துவம் தொழிற் புரட் சிக்குப்பின், பணக்காரன் ஏழைக் குள்ள சீர்கேடான பொருளியல் உறவினால் ஏற்பட்டது. இப்படி, பொருளியலும் அரசியலும் பின்னிக் கிடப்பதுபோல் அரசியலும் ஒழுக்க மும் ஒன்றையொன்று சார்ந்திருக் கிறது. அரசியலில் உறவும் தேவை: (Politics and Ethics) ஒழுக்க நூல் அல்லது அறநூல் என்பது ஒரு மனிதன் எதை விலக்கவேண் டும், எதைக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்துவது. தனி மனி தனுக்கு வரையறுக்கப்பட்டுள்ள ஒழுக்க விதிகள்தான் சமுதாயத் திற்குத் தேவைப்படுகிறது. சமு தாயத்திற்குத் தேவைப்படுவதுதான் அரசியலுக்கும் பயன்படுகிறது. அரசியல் என்பது தனி மனிதர்கள் கூட்டுச் சேர்ந்து உருவாக்குவது தான். ஒழுக்க ரீதியில் தவறுதலாக, தீமை பயப்பனவாகக் கருதப்படு கின்ற ஒரு கொள்கை அரசியலில் நன்மை கொடுக்கக்கூடியதாக இருக்கமுடியாது. ஒழுக்க ரீதியில் நேர்மையானதாக,நீதியுடையதாகக் கருதப்படுகின்ற ஒரு கொள்கை அரசியலில் தீமை பயப்பனவாக— ஒழுக்கத்திற்குப் புறம்பானதாக இருக்க முடியாது. அரசியலிலே தனிமனிதன் ஒழுக்க முறையையும் உறவு வழியையும் குறிப்பிடுவது தகாது என்று கூறுவதை அரசியல் அறிஞர் சார்லஸ் ஜேம்ஸ் பாக்ஸ் (Fox) அடியோடு மறுக்கிறார். தனி மனிதனுக்கு வரையறுக்கப்பட்டவை தான் சமுதாயத்திற்கு. சமுதாயத் திற்கு வரையறுக்கப்பட்டவைதான் அரசாங்கத்திற்கு. அரசியல் கலை தனி மனிதனின் உரிமைகள், அர சாங்கத்தின் கடமைகள், ஒரு நாட் டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் உள்ள தொடர்பு இவைபற்றி விளக்குகின் றன. தனி மனிதன் உரிமை என் பது ஒழுக்க வரம்பிற்கு உட்பட்டது தான். ஒரு அரசாங்கத்தின் கட மையும் ஒழுக்கக் கட்டுபாட்டிற்கு உட்பட்டதுதான். ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் உள்ள தொடர்பும் சில ஒழுக்க விதிக்களுக் குட்பட்டு இயங்குகின்றது.

எனவேதான், அரசியல் அறிஞன் அரிஸ்டாடில் மக்கள் நல்ல வாழ்க்கை வாழ்வதற்காக அரசாங் கம் ஏற்பட்டது என்று கூறிப் போந்தான். ஆகவே, தனி மனித னுக்கு ஒரு சில விதிகளும், அர சாங்கத்திற்கு வேறுசில ஒழுக்க விதிகளும், அவைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று எதிர்மாறானவை என்று அரசியல் அறிஞர் எவரும் கூறார். நல்லவைக்குட்பட்ட அரசி யல் கருத்துக்களே மக்கள் மத்தி யில் செல்வாக்குப் பெறும்.

## நாடும் அரசாங்கமும்:

ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள மக்களை ஆளுகின்ற தன்னாட்சி உரிமை பெற்ற ஒரு அரசாங்கத் தையே நாடு என்கின்றனர் அரசி யல் அறிஞர்கள். ஒரு நாடு என் றால், அதற்கென்று ஒரு நிலப்பரப்பு, மக்கள், அரசாங்கம், தனியாட்சி உரிமை ஆகிய நான்கும் தேவைப் படுகிறது. இவைகளில் ஒன்று இல்லை என்றாலும் அவை நாடாக கருதப்படமாட்டாது. ஆனால் அர சாங்கம் என்பது நாட்டிற்குத் தேவையான நான்குடன், அதாவது நிலப்பரப்பு, மக்கள், தனியாட்சி உரிமை இவற்றுடன் தேவைப்படு கின்றஒன்று.ஒருநாட்டிற்குத்தேவைப் படுகிற நிலப்பரப்புப் பெரியதா சிறி யதா என்று எண்ணிப்பார்ப்பது தவறு. ஒரு நாடு நிலப்பரப்பில் பெரியதாகவும் இருக்கலாம்; கடு களவு சிறியதாகவும் இருக்கலாம். ஏறத்தாழ 80க்கு மேல் இருக்கின்ற உலக நாடுகளில் 38 சதுர மைல் நிலப்பரப்பு உள்ள இத்தாலியில் உள்ளசான் மரினோவும் இருக்கிறது; 3,619,644 ச. மைல் உள்ள இரஷ் யாவும் இருக்கிறது. அதுபோன்றே மக்கட் தொகையும். மக்கட் தொகை குறைவாகவும் இருக்க லாம்; கூடுதலாகவும் இருக்கலாம். அண்டோரா என்னும் சின்னஞ் சிறு நாட்டின் மக்கட் தொகை 5000. அதே சமயத்தில் சீனாவின் மக்கட் தொகை ஏறத்தாழ 60 கோடி. பண்டைக்காலத்தில்உள்ள கிரேக்க நாடுகள் மிகமிகக் குறைவான மக் கட் தொகையுடன் சிறிய நிலப் பரப்பில் இருந்தன. இருந்தபோதி

லும், அவைகள் வலிமை பெற்று விளங்கின. காரணம் சிறிய நாடாக இருந்தகாரணத்தால்,மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியும் நாட்டுப் பற்றும் மிகுதியாக இருந்தது. ஒரு நாடு என்று சொல்வதற்குத் தேவை யான மூன்ருவது உறுப்பு அரசாங் கம். ஒரு நாட்டின் அரசாங்கத்திற்கு மூன்று முக்கிய பிரிவுகள் இருக் கின்றன. முதல் பிரிவு சட்டமன்றம் (Legislative) என்றும், இரண்டா வது பிரிவு செயல்துறை (Executive) என்றும், மூன்ருவது பிரிவு அறத்துறை (Judiciary) என்றும் அழைக்கப்படுகிறது. சட்டமன்றம் நாட்டிற்கு தேவையான சட்டங்களே இயற்றும் உரிமை படைத்தது. செயல்துறை அந்தச் சட்டங்களே செயலாற்றும் உரிமையைக்கொண் டது. அறத்துறை செயல்முறை களில் ஏற்படுகின்றகோளாறுகளைக் களைந்து தனி மனிதனுக்கு நன்மை பயக்க ஏற்படுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் முப்பிரிவுகளான இம்மூன்று துறைகளும் ஒன்றை யொன்று விலகி நிற்கும் ஆற்றல் படைத்தவை அல்ல. ஒன்றை யொன்று சார்ந்து நிற்பவை. ஒன் றுக்கொன்று தொடர்பு கொண் டவை. ஒரு நாட்டிற்குத் தேவை யான இந்த நான்கிலும் மிகமிக முக்கியமானதாகவும் அவசியமான தாகவும் கருதப்பட்டு வருவது தனி யாட்சி உரிமை. ஒவ்வொரு நாட்டிற் கும் தன் நாட்டு மக்கள்மேல் சட்டங் களே உண்டாக்கவும், அவைகளே அவர்கள் மதித்து நடக்கச் செய்யு கின்ற ஆற்றலும் இருக்கவேண்டும். அந்த நாட்டிற்குட்பட்ட தனி மனி தர்கள், அமைப்புக்கள் அந்த நாட் டுச் சட்டங்களுக்கு உட்பட்டு இருக்கவேண்டும். அதுபோலவே, அந்நாடு வெளிநாட்டிற்குக் கட்டுப் படாத சுயேச்சை பெற்ற சுதந்திர நாடாக இருக்கவேண்டும். தனி யாட்சி உரிமையில் லாதவைகள் நாடுகளாகக் கருதப்படமாட்டா. மேற்கூறியவைகளிலிருந்து ஒரு நாடு என்பது நிலப்பரப்பு, மக்கட் தொகை, அரசாங்கம், தனியாட்சி உரிமை இந்த நான்கின் கூட்ட மைப்பே என்பது புலனுகின்றது.

## நாடும் சமுதாயமும்:

நாடு என்பது அரசாங்கத்தை உள்ளடக்கியது. தனி மனிதர்கள் பலர் சேர்ந்து இருக்கின்ற ஒரு அமைப்பே சமுதாயம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு சமுதா யத்தில் பலவிதமான பகுதிகள் உண்டு. பல மனிதர்கள் சேர்ந்து இருக்கிற ஒரு சமுதாய அமைப்பை முறைப்படி கட்டுப்பாட்டுடன்செயல் படுத்த நாடு தேவைப்படுகிறது. பலபேர் சேர்ந்து இருக்கின்ற ஒரு சமுதாயம், கட்டுப்பாடில்லாமல் இருக்கலாம். உதாரணமாக, எஸ் கிமோ என்ற குளிர் பிரதேசத்துப் பிரிவினர் நாடின்றி, ஆனுல், ஒரு சமுதாயமாக வாழ்கின்றனர். அவர் களுக்கு நாடு இல்லை என்று கூறு கின்ற பொழுது, முறையுடன் ஒரு சில விதிகளுடன் கட்டுப்பாட்டுடன் செயல்படுத்தத் தேவையான 'நாடு' இல்லை என்பதே பொருளாகும். சமுதாயத்தில் இருக்கிற ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய விருப் பப்படி எதையும் செய்யும் உரிமை யைப் பெற்றிருக்கிருன். ஆனுல், ஒரு நாட்டின் குடிமகனுக இருக்கிற ஒரு வன் அந்தநாட்டு அரசாங்கத்தின் சட்டங்களுக்குட்பட்டு, அவைகளுக் குக் கட்டுப்பட்டுச்செயலாற்றும் உரி மையைப்பெற்றிருக்கிருனேயல்லாது, தன் விருப்பப்படி எதையும் செய்யும் உரிமையைப் பெறமுடியாது. ஆனுல், அதே சமயத்தில் கட்டுப் பாடு என்ற பெயரில் அந்த நாடு, தான் எண்ணிய அனைத்தை யும் சர்வாதிகாரப்போக்கில் மக்கள் மன்றத்தில் திணிக்கமுடியாது. ஒரு குறிப்பிட்ட வரம்பை மீறி 'நாடு' அளவுக்குமீறிய அதிகாரத்தை மக் கள்மீது திணித்த காரணத்தால் ஜெர்மனியில் ஹிட்லரின் (1933-45) சர்வாதிகாரமும்,இத்தாலியில் முசோ லினியின் (1922-44) சர்வாதிகார மும் ஏற்பட வழி உண்டாயிற்று.

## நாடும் தேசிய உணர்ச்சியும்

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் உள்ள ஒரு மொழி பேசுகின்ற, அல் லது ஒரு மொழியில் பிரிந்த பல மொழிகள் பேசுகின்ற இறந்தகால கீர்த்திமிக்க வரலாற்றை உள்ளடக் கிய ஒரே இனத்தை சேர்ந்த மக்கள், தங்களுக்குள் ஒற்றுமை உணர்ச்சி யையும் நாட்டுப்பற்றையும் கொண் டிருப்பதுதான் தேசிய உணர்ச்சி என்று அழைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் உள்ள மக் களை ஒன்றுபடுத்த மிகவும் உதவியா யிருப்பது இன உணர்ச்சி. இந்த இன உணர்ச்சி எந்தச் சந்தர்ப்பத் திலும் அந்த மக்களுக்கு ஏற்பட லாம். உதாரணத்திற்கு, தென்னிந்தி யாவை எடுத்துக்கொள்வோம். விந் தியத்திற்குத் தெற்கே உள்ள தெலுங்கு பேசுவோரும், கன்னடம் பேசுவோரும்,மலையாள மொழி பேசு வோரும், தமிழ் பேசுவோரும் திரா விட இனத்தை சேர்ந்தவர்கள் என்று மனித இன வரலாறு நூல் கூறுகிறது. தமிழ் மொழியினின்று பிறந்தவைதான் தெலுங்கு, மலை யாளம், கன்னடம், துளுபோன்ற மொழிகள். இவைகள் அனைத்தும் திராவிட மொழிகள் என்று அழைக் கப்படுகிறது, என்று ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுகிருர்கள். ஒரே இனத்தைச் சேர்ந்த மக்கள் பல மொழிகள் பேசுகின்றனர் என்று நம்மைப் பொறுத்தவரை கூறமுடி யாது. காரணம், மற்ற மொழிகள் தமிழ் என்ற தாயிடம் இருந்து பிரிந் தவை. இவைகள் ஒன்றுக்கொன்று மிகுந்த தொடர்பு உடையன. எனவே, மொழிவழி-இனவழி ஆகிய இரண்டு கோணத்திலிருந்து பார்த் தாலும் திராவிடர் என்ற ஒரேதேசிய உணர்ச்சிதான் தென்படுகிறது. ஒரே இனத்தைச் சார்ந்திருக்காமல், பல இனத்தின் சேர்க்கை உள்ள ஒரு நாட்டில் தேசிய உணர்ச்சி தோன்ருதா என்று பலர் வினு எழுப் பக்கூடும். தோன்றலாம் என்ற பதிலே பொருந்தும். அமெக்கா, சுவிட்சர்லாந்து, கனடா போன்ற நாடுகளில் உள்ள மக்கள் பல இனங்களைச் சேர்ந்தவர்கள். ஒரே இனத்தை சேர்ந்தவர்களல்லர். அதைபோன்று ஆங்கிலேயர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். செல்ட் (Celts) ட்யூடன்ஸ் (Teutons) டேன்ஸ் (Danes) போன்ற பல இனங்களின் கூட்டுச் சேர்க்கையே ஆங்கிலேயர்கள் என்று மனித இன வரலாறு கூறு கிறது. இருந்தும் அவர்களுக்குத் தேசிய உணர்ச்சி இருக்கிறது. அவர்கள் எல்லோரும் ஒரே மொழி யான ஆங்கிலத்தையே பேசுகிருர் கள். அதுமட்டுமல்லாமல் பூகோள ரீதியாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப் பிற்குள் எல்லோரும் வசிக்கிருர்கள். சுவிட்சர்லாந்தில் பல இனங்கள் சேர்ந்து வாழுகின்றன. பல மொழி களும் பேசுகிருர்கள். இருந்தும் அங்கு பலமான தேசிய உணர்ச்சி இருக்கிறது. பல மொழிகள் என்ருல் இந்தியாவைப்போல் ஒரு இலட்சத் திற்குக் குறைவான அளவு மக்கள் பேசக்கூடிய 720-இந்திய மொழி களும் 63-பிறமொழிகளும் அங்கு இல்லை. சுவிட்சர்லாந்தில் உள்ள மக்கள் பிரெஞ்சு, இத்தாலி, ஜெர் மன் ஆகிய மூன்று மொழிகள் மட் டும்தான் பேசுகின்றனர். அதுமட்டு மல்லாமல், பூகோளரீதியாக அவர்

களுக்கென்று கீர்த்திமிக்க மிகப் பெரிய ஒரு வரலாறு இருக்கிறது. ஆனால், நம்மைப் பொறுத்த வரையில் தேசிய உணர்ச்சிக்குத் தேவையாக விளங்குகின்ற ஒரே மொழி (தமிழ், அதிலிருந்த பிரிந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம்) ஒரே இனம் (திராவிடர்) ஒரே கலாசாரம், ஒரே பண்பாடு, பொதுவான வரலாறு போன்ற எல்லாச் சாதனங்களும் இருக்கின்றன. ஒரு சிலர் மொழித் தேசியம்தான் இன்றைய தினம் உள்ள உண்மைத் தேசியம் எனச் செப்பக்கூடும். ஒரே மொழி பேசுவோரில் தேசிய உணர்ச்சி தோன்றினால்கூட, நம் நாட்டைப் பொறுத்த வரையில் அது நல்லதல்ல. இன வழி, மொழிவழி; கலாசார வழி பண்பாடு வழி (எல்லாம் ஒரே பண்பாடு, ஒரே இனம் ஒரு கலாசாரம்) அமைகின்ற தேசியம்தான் சிறந்த தேசியம்.

இன்றைய தினம் மொழிவழி தேசியத்தை மட்டும் ஒத்துக்கொண்டால், நாளைய தினம் ஜாதிவழி தேசியத்தை ஒத்துக்கொண்டாகவேண்டும். மொழி வழியில்தான் இன்றைய தினம் தேசியத்தை காண முடிகிறது என்று சொல்வதை ஒத்துக்கொண்டால் நாளைய தினம் நாடார் ஜாதியைச் சேர்ந்தவர்கள் நாடார்வழி தேசியம் என்றும், முதலியார் ஜாதியைச் சேர்ந்தவர்கள், முதலியார்வழி தேசியம் என்றும், பிள்ளை ஜாதியைச் சேர்ந்தவர்கள் பிள்ளைவழி தேசியம் என்றும் தேசிய உணர்ச்சிக்கு தேவையான, உண்மையான தேவைகளை மறைத்து இவைகளையும் ஒத்துக்கொள்ள வேண்டி நேரிடும். ஆகவே, உண்மையான தேசிய உணர்ச்சி மொழி, கலாசாரம், பண்பாடு, இனம் ஆகியவற்றின் அடிப்படையில் எழுகின்றது. தென்னிந்தியர்களிடையே இந்த நான்கிலும் ஒரே ஒற்றுமை உணர்ச்சி இருக்கின்ற காரணத்தால், இனவழி தேசியம் உண்மையான தேசியமாகக் கருதப்படுகிறது. இந்த இனவழி தேசிய உணர்ச்சி தமிழர்களிடையே இருக்கிற அளவு ஆந்திரர்களிடையே, மலையாளிகளிடையே, கன்னடியர்களிடையே இல்லையே என்று பலர் வினா எழுப்புவர். தேசிய உணர்ச்சி இன்று இல்லை என்றால், நாளை ஏற்படும். நாளையும் இல்லை என்றால் நாளை மறு நாள் ஏற்படும். லக்னோ பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் டாக்டர் ஆசீர்வாதம் அவர்கள் இதைப் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது "காலம் தான் தேசிய உணர்ச்சியை உருவாக்கும்" என அழகுபடக் குறிப்பிட்டார். ஆகவே, இந்த உணர்ச்சி எந்த நிமிடத்திலும் அவர்களுக்கு ஏற்படலாம். அவர்கள் ஒரே இனமாக இருக்கின்ற காரணத்தால் அந்த உணர்ச்சி விரைவில் ஏற்பட்டே தீரும்.

## நாடு (அரசாங்கம்) எவ்வாறு தோன்றியது:

'நாடு' என்று நாம் குறிப்பிடுகின்ற பொழுது, அது அரசாங்கத்தை உள்ளடக்கியது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே 'நாடு' என்று குறிப்பிடுகின்ற பொழுது, அது அரசாங்கத்தையும் குறிக்கும்—ஒரு சொல்லாக எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு நாடு எவ்வாறு தோன்றியது என்ற வினாவிற்குப்பல்வேறு அறிஞர்கள்பலவித கோட்பாடுகளைக் குறிப்பிடுகின்றனர். சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு (Social Contract theory) ஒரு சில காரணங்களையும், தெய்வீக உரிமை கோட்பாடு (Diviue Right theory) சில மாறுபட்டகாரணங்களை, பலாத்காரக்கோட்பாடு (Theory of Forc) சில காரணங்களையும் வரலாறு கோட்பாடு (Historical theory) சில காரணங்களையும் கூறுகிறது. எது உண்மையான கோட்பாடு என்பதை ஒவ்வொன்றையும் ஆராய்வதின் மூலம் நாம் காணலாம்.

## சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு:

உலகத்தின் வரலாறு இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. நாடு (அரசாங்கம்) தோன்றுவதற்கு முன், மக்கள் இருந்த நிலை ஒரு பாகமாகவும், நாடு (அரசாங்கம்) தோன்றிய பின் மக்கள் இருந்த நிலை மற்றொரு பாகமாகவும் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நிலையும் எடுத்து ஆராயப்படுகிறது. நாடு தோன்றுவதற்கு முன் மக்களுக்கு சட்டத்தை இயற்றவும், செயல்படுத்தவும், சமுதாயத்தை ஒழுங்குபடுத்தவும் தேவைப்பட்ட அரசாங்க அமைப்பு இல்லை. மக்கள் தங்கள் எண்ணம்போல் வாழ்ந்து செயலாற்றி வந்தனர். ஒவ்வொரு தனி மனிதனும் தன் எண்ணப்படி காரியமாற்றினான். ஒவ்வொரு மனிதனும் தன் எண்ணத்திற்கேற்ப ஒவ்வொரு காரியத்தை ஆற்றுகின்ற பொழுது, சமுதாயத்தில் ஒரு கட்டுப்பாடு, ஒழுங்கு அறவே இல்லாது போயிற்று. மனித சமுகத்தின் கட்டுப்பாடு இல்லை. சுயேச்சையாக வாழ்ந்த மனிதன் இயற்கையின் கட்டுப்பாடு ஒன்றிற்கு மட்டும் அஞ்சி வாழ்ந்தான். உதாரணமாக 'கொலை செய்யக்கூடாது' என்றசமுகக்கட்டுப்பாடுஅரசாங்கக் கட்டளையாக மாறியிருக்கிறது. 'தீயை மிதித்தால் சுட்டுவிடும்' எனவே மிதிக்கக்கூடாது என்பது அரசாங்கத்தின் கட்டளையல்ல. அது இயற்கையின் கட்டளையாகக் கருதப்படுகிறது. முதல் பிரிவில் வாழ்ந்த மனிதன் இந்த இயற்கையின் கட்டளைக்கு அடிபணிந்தான். ஆனால், நாடு (அரசாங்கம்) இல்லாத காரணத்தினால் சட்டம் என்பது என்ன என்பதை அறியாமல் போனான். சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டைத்தெளிவுபடுத்தியவர்கள் மனிதனின் இந்த முதல் பகுதி நிலையை 'இயற்கை வழி' (State of Nature) என்று கூறிப்போந்தனர். இயற்கைச் சட்டத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டுத் தன் எண்ணப்படி வாழ்ந்த மனிதர்கள் ஒருவரை ஒருவர் கொன்று, சூதிட்டு, பொய் சொல்லி வாழ்க்கை நடத்தினர். ஒவ்வொரு மனிதனுக்கும்தன்னைப்பிறரிடமிருந்து தற்காத்துக் கொள்வது பெரிய பிரச்சினையாக மாறிவிட்டது. எனவே,சிறிதுநாள் கழித்து, எல்லா மனிதர்களும் கூடி ஆலோசித்துத், தங்களது உயிரையும் உடைமையும் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுத் தங்களுக்கென்று ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஆகவே, நாடு (அரசாங்கம்)என்பது மனிதர்களிடையே ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் விளைவாக மனிதர்களால் உண்டாக்கப் பட்டது என்பதுதான் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டின் கொள்கை. "மனிதர்களால் ஏற்படவில்லை, அது இயற்கையாகவே தோன்றியது" என்று அந்தக்கொள்கைக்கு மறுப்பு கூறுகிறார் அரசியல் அறிஞர் அரிஸ்டாடில். ஆனால் மனிதனால் உருவாக்கப்பட்டது என்ற சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டை ஆதரித்து

( 12-ம் பக்கம் பார்க்க )

# மலரும் காலம் அதிதொலைவில் இல்லை!

சில நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தான், தம் பெயரை உலக வரலாற்றுச்சுவடியிலே பொறித்துள்ள நாடுகள் பல நாநிலத்தில் இருக்கின்றன. அந்நாடுகளிலே வாழ்ந்த மக்கள் தங்களின் தாயகத்தைத்தவிர, வேறெரு தேயத்தை கனவில்கூட காணுதவர்கள். அவர்கள், கண்மூடி வழக்கத்தாலும், காட்டுமிராண்டிச் செயல்களாலும் பின்னப்பிட்டு அநாகரிகச் சேற்றிலே உழன்றுகொண்டிருந்தவர்கள்.

பகுத்தறிவும், சிந்தனைத்தெளிவும் அற்று வாழ்ந்த அவர்கள், சொந்த மண்ணைப் பிறர் சுரண்டி வாழமட்டும் பொறுக்காத உள்ளத்துணிவு பெற்றவர்களாய் விளங்கினுர்கள். தம் நாட்டு அடிமை விலங்கொடிக்கும் அரும் பணியிலே அஞ்சாத நெஞ்சுரம் கொண்டு தங்களை அர்ப்பணிக்க முன்வந்தனர். உடலையும், உடைமைகளையும், உயிரையும் தாயகத்துச் சுதந்திரத்திற்காக ஈயும், தியாக முத்திரை பதித்தவர்களை தாங்கிய பெருமை அத்தேயங்களுக்கு உரியதாகும்.

அவ்வரிசையிலே அங்கம் வகிக்கும் நாடுதான், மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள, "சிர்ராலியோன்" என்ற கருப்பர்நாடாகும். இது "சைபிரியாவுக்கும், கினி"க்கும் இடையில் இருக்கிறது.

சற்றேறக்குறைய, 600-ஆண்டுகளுக்கு முன், அப்படி ஒரு நாடு இருந்ததாக வரலாற்றிலே கிடையாது. உலக நாடுகளோடு எவ்விதமான ஒட்டுறவும் இன்றி, அந்நாடு இருந்துவந்துள்ளது.

வங்கம் விளையாடும் கடலினிலே கப்பல்ஓட்டிப் பவனிவந்த,போர்த்துக்கல் நாட்டு மாலுமி ஒருவரால், சிர்ராலியோன் கண்டுபிடிக்கப்பட்டது.

அலையாடும் கடலைவிட்டு கரை ஏறிய மாலுமி, அந்நாட்டைக்கண்டு அளவில்லா ஆனந்தமடைந்தான்.

மலைகளால் சூழப்பெற்ற அந்நாடு, விலைமதிக்க ஒண்ணுப் பெருஞ்செல்வங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது, அப்போது அவனுக்குத் தெரியாது. மலைகளைக் கடந்து உள் செல்ல முனைந்த அம்மாலுமி, கண்ட காட்சிகளும், கேட்டகுரல் ஒலிகளும் அவனை பிரமிக்க வைத்தன.

மலைகளிலெல்லாம் பீடுநடையிட்டு, பெருமிதத்தோடு உலவும் சிங்கங்களைப் பெரிதும் காணமுடிந்தது. சிங்கங்கள் கர்ஜிக்கும் முழக்க ஒலி எங்கும் ஒலித்தவண்ணமிருந்தது. ஆகவேதான், சிங்கங்கள் உலவும் அந்நாட்டிற்கு "சிங்கங்களின் நாடு" (சிர்ராலியோன்) என்று பெயரிட்டழைத்தான்.

அந்நாட்டின் பரப்பு, 27,925 சதுர மைல்களாகும். அந்நாடு 23-இலட்சம் மக்களைக்கொண்டுள்ளது. "பிரீடவுன்" என்னும் நகர் அந்நாட்டின் தலைநகராக விளங்கிவருகிறது.

பத்தொன்பதாம் நூற்றுண்டு முதல், பிரிட்டனின் வசமான சிர்ராலியோன், 1896-வரையில் பாதுகாப்பு நாடாக இருந்துவந்தது.

ஆனுல், அம்மக்கள் அடிமைத் தளை அறுக்க ஆர்ப்பரித்து எழுந்தார்கள். குறிக்கோள், நாட்டின் சுதந்திரம் என்றபோதிலும், சில கருத்து வேறுபாடுகளால் பல கட்சிகள் தோன்றின. "சிதறுண்டு செயல் புரிந்தால், எதிரியின் அடிமைப் பிணைப்புத்தான் வலுப்பெறும்" என்றுணர்ந்த அந்நாட்டிலிருந்த எல்லாக் கட்சிகளும், தேசியக் கோரிக்கையை ஆதரித்து, "சர் மில்டன் மார்க்காய்" தலைமையில் ஐக்கிய முன்னணியாகச் செயல்படலாயிற்று.

**சி. பெரியண்ணன்**

விடுதலைக்கு வழிவகுத்து சுதந்திரத்திற்காக பாடுபட்ட ஐக்கிய முன்னணி, படிப்படியாக வளர்ந்து, 1957-ம் ஆண்டு நடந்த தேர்தலில், "மக்கள் கட்சி" தனிப்பெரும் விடுதலை இலட்சியத்தைக்கொண்டதாக வெற்றிபெற்றது. கூட்டு அமைச்சரவை, நாட்டுமக்களின் நலன்களிலேயே நாட்டங்கொண்டு நல்ல முறையிலே பணியாற்றிவந்தது.

இறுதியில், 1960-ம் ஆண்டு மார்ச்சுமாதம் சுதந்திரப் பேச்சுவார்த்தை நடந்தது. அதன் பலனுய், 1961-ம் ஆண்டு, ஏப்ரல்மாதம் 27-ம் தேதி அடிமை விலங்கொடித்து, விடுதலைபெற்றுச் சுதந்திர நாடாயிற்று. சுதந்திர சிர்ராலியோனின் தலைமை அமைச்சராக, விடுதலை இயக்கத்தின் தலைவரும், ஏற்கெனவே பிரதம அமைச்சராக இருந்தவருமான ஸர்மில்டன் மார்க்காய் தொடர்ந்து அப்பதவியிலே இருப்பார்.

இப்படிப்பட்ட, சிறிய நாடுகள் எல்லாம், சுதந்திரமடைந்து சுயாட்சி நடத்துகின்றன. ஒருகோடி மக்களுக்கு குறைவான, நம் தென்னகத்தைவிடப் பரப்பிலும் குறைவான நாடுகள் எல்லாம், விடுதலை அடைந்து உலக அரங்கிலே தலை நிமிர்ந்து பீடுநடை போடுகின்றன. அப்பட்டியலில் இடம்பெற்ற நாடுகளாவன:—

அல்பேனியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், பல்கேரியா, பைலோரஷியா, கம்போடியா, இலங்கை, கோஸ்டாரீகா, கியூபா, டென்மார்க், டொமினியன்குடியரசு, ஈக்வடார், எல்சால்வடார், பின்லாந்து, கனு, கிரீசு, குவாடிமாலா, ஹைட்டி, ஹோண்டுராஸ், ஹங்கேரி, ஐஸ்லாந்து, இராக், அயர்லாந்து, இஸ்ரேல், ஜார்டன், லயோஸ், லெபனுன், லைபீரியா, லக்சம்பர்க், மலேயா, மொராக்கோ, நேபால், நெதர்லாந்து, நியூசிலாந்து, நிகாரகுவா, நார்வே, பனுமா, பராகுவே, போர்த்துக்கல், சுவீடன், துனிசியா, உருகுவே, ஏமன் என்ற நாடுகள் ஒருகோடியல்ல; ஒரு கோடிக்கும் குறைந்த மக்களைக் கொண்டவைகளாகும்.

இவைகள் விடுதலையடைந்து, தனித்தியங்கும்போது, 2,45,672 சதுரமைல் பரப்பளவுள்ள நம் தென்னகம் அடிமைப்பட்டிருப்பது சரிதானு? சில இலட்சம் மக்களைக் கொண்ட சிர்ராலியோனைப்போன்ற நாடுகள் எல்லாம், உலக அரங்கிலே, சுதந்திரமடைந்து ஒய்யார நடை நடக்கும்போது, சுமார் பத்து கோடி மக்களைக் கொண்டுள்ள ஒரு நாடு, அடிமைப்பட்டு அவதிப்படுவதை நம் தென்னகத்தைத் தவிர, அகிலத்தில் வேறு எங்கும் காண முடியாது.

தென்னகத்துக்குரியோரே! திருவிடத்து செம்மல்களே! சொந்த நினைவுடன் ஒரு கணம் சிந்தித்துப்

பாருங்கள்! வீரம் மிகுந்தவரின் கோட்டம், மறவர்களின் மரபு, மாண்புமிகு மன்னவரின் சந்ததி, வீரத்தால் வையத்தை வலம் வந்த வீரர் விளையாடிய திருநாடு, அந்நியனுக்கு அடிமைப்பட்டு அடங்கி இருப்பது வேடிக்கை மட்டுமல்ல; விவேகமும் ஆகாது! தென்னகம் தனித்தியங்க என்ன இல்லை இங்கே?

முழங்கு திரைகடல்கள் முப்பக்கம் இன்பநாதம் எழுப்பியவண்ணமிருக்கின்றன. புனல் படிந்து பொங்கி வரும் காவேரி, இருமருங்கும் கன்னல் செங்கரும்பு, கனி தரும் செவ்வாழைத் தோட்டங்கள், வளங்கொழித்துக் கதிர் வீரியும் செந்நெல் கழனிகள், அதையடுத்த பகுதியிலே, ஆராய்ச்சி அறிஞரின் முடிபுரைக்கும் மண்ணெண்ணெய் ஊற்றுப்பெருக்கெடுத்து மறைந்தோடும் சேலம் நமக்களித்த இரும்புக் கனி' நெய்வேலி பரிந்தளிக்கும் நிலக்கரி' கடலளிக்கும் முத்து, இத்தனையும்' இன்னும் எத்தனையோ உண்டு இத்' தென்னவர் திருநாட்டில்!

கேரளத்துப் பூமியிலே, யானை பிளிறும் முழக்க ஒலி காடதிரும். சந்தனம், கருங்காலி, தேக்கு மரங்கள் காடெல்லாம் செழித்தோங்கி வளர்ந்திருக்கும். மிளகுக் கொடி படர்ந்து, "என் உதவி இதோ" என்று மிளகைத் தந்துதவும் தென்னகச் சோலை எங்கும் கண்ணுக்கு களிப்பூட்டும்.

இதுமட்டுமல்ல, கன்னட மொழி பூத்துக் குலுங்கும் பூமியிலே, தங்கக் கொடி படர்ந்து மின்னும் பொன் கொடுக்கும், மேலும் எழில் நிறைந்த சோலைகளும், இன்ப அருவிகளும், கண்கொள்ளா காட்சி அங்கே!

கோதாவரி, கிருஷ்ணா நதிகள் பாய்ந்து குறையாத செல்வங்களைக் குணங்கெடாது தந்துதவி, கொள்கைக் காக்க முனையும் ஆந்திரத்து அருமைகளை அளவிட்டுரைத்தல் முடியாது.

இத்தனை இருந்தும் அடிமைப் பட்டுழல்வது ஏன்? 'ஆகாத' செயல் என்று அடங்கி ஒடுங்கி கிடப்பாயானால், அகிலத்துக் குட்டி நாடுகள் நம்மைக் கண்டு கைகொட்டிச் சிரிக்காதா?

மலர்ந்த நாடுகளை மனதிலே நிறுத்திப் பார்த்தால், நம் நாடு மலரும் காலம் அதிதொலைவில் இல்லை; காலம் கடத்தாதீர்! ஞாலம் சிரிக்கும்.

★

10-ம் பக்கத் தொடர்ச்சி

அதற்குத் தீவிர விளக்கம் அளித்தவர்கள் ஹூக்கர் குரோஷியஸ், ஹாப்ஸ் லாக், ரூசோ. இம்மூவரும் இக் கோட்பாட்டை மிகத் தீவிரமாக ஆதரித்தார்கள். இக்கோட்பாட்டைப் பொறுத்தவரை இம்மூவருக்கும் ஒரு சில வேறுபாடுகள் மனிதனுடைய இயற்கை வழி பிரிவிலும், நாடு தோன்றியபின் மக்கள் நிலையிலும் இருந்தது.

## தாமஸ் ஹாப்ஸ்:

ஆங்கில நாட்டைச் சேர்ந்த தாமஸ் ஹாப்ஸ் (1588-1879) இங்கிலாந்தில் உள் நாட்டுப் போர் நடந்த காலை அதைக் கூர்ந்து கவனித்து, அதன் அடிப்படையில் தனது சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டை வகுத்தார். உள்நாட்டுப் போரினால் இங்கிலாந்தில் அமைதியின்றிப் பொருமையும், போட்டியும் பூசலும் மலிந்து கிடந்தன. மக்களைச் சட்டத்திற்குட்பட்ட வழியில் நடத்திச் செல்ல வலிமை பெற்ற ஒரு அரசாங்கம் தேவைப்பட்ட நேரம் அது. உண்மையான அமைதியையும் சட்டத்தையும்நிலைநாட்டச்சர்வாதிகார அரசாங்கம் தேவை என்று ஹாப்ஸ் முழங்கினார். மனிதன் இயற்கையின் போக்கில் வாழ்ந்த காலத்தில், அதாவது, அரசாங்கம் அமைப்பதற்கு முன் வாழ்ந்த காலத்தில் கொள்ளையும், கொலையும், குழப்பமும், பூசலும் பொருமையும், போட்டி உணர்ச்சியும் அதிக அளவில் இருந்தன. ஒவ்வொரு மனிதனும் தன்னுடையபகுத்தறிவின்படிசெயலாற்றவில்லை. மாறாக ஆசைக்கு அடிமைப்பட்டு அதன்வழி செயலாற்றினான். சட்டம் இல்லை, நேர்மை இல்லை. நீதி இல்லை. ஒவ்வொரு மனிதனும் மற்றவனுக்குப் பயந்தே தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். ஒவ்வொருவனும் மற்றவனுக்குப் பயந்து வாழ்ந்த காரணத்தால், அமைதி இன்றிச் சமுதாயம் இயங்கி வந்தது. இந்தப் பயத்தைப் போக்கி அமைதி ஏற்படுத்துவதற்காக ஒவ்வொருவனும் மற்றவனிடம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டான்.

"நான் என்னை ஆளுகின்ற பொறுப்பையும், என் உயிர் உடைமை ஆகியவைகளைக் காப்பாற்றி அமைதியான வாழ்க்கையை உண்டுபண்ணக்கூடிய பொறுப்பினையும் இந்த அரசாங்கத்திடம் (அரசாங்க மன்னராட்சியாகவும் இருக்கலாம் அல்லது பலபேர் அடங்கிய குழுவின் ஆட்சியாகவும் இருக்கலாம்) ஒப்படைக்கிறேன்"

இந்த ஒப்பந்தத்தை ஒவ்வொரு மனிதனும் மற்றவனிடம் செய்து கொள்ளுகிறான். இதன் பயனாக நாடு (அரசாங்கம்) உருவானது என்று ஹாப்ஸ் கூறுகிறார். சமுதாயத்தில் உள்ள ஒரு மனிதன், மற்றவனிடம் செய்துகொள்ளும் இந்த "சமுதாய ஒப்பந்தத்தின்" பயனாக ஏற்பட்டிருக்கின்ற அரசாங்கம் மன்னராட்சியாகவும் இருக்கலாம், அல்லது மக்களாட்சியாகவும் இருக்கலாம். ஆனால், ஹாப்ஸ் மன்னராட்சி முறையைத்தான் வரவேற்று வாழ்த்துக் கூறுகிறார். அதற்குக்காரணங்களும் கூறுகிறார். தனி மனிதனை ஒரு மன்னன் ஆட்சி புரிந்தால் ஒரே சீரும், ஒரேவித மாறுபாடில்லாத செயல் முறையும் இருக்கும் என்கிறார். தன்னை ஆளுகின்ற உரிமையை ஒவ்வொரு மனிதனும் மன்னனிடம் ஒப்படைத்ததுபோல், தன்னுடைய எல்லா உரிமைகளையும் மன்னரிடம் ஒப்படைத்துவிடவேண்டும். மன்னனுக்கு விரோதமாக எந்தக் கருத்தையும் எவரும் பிரதிபலிக்கக்கூடாது. ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகு மன்னன் தவறான பாதையில் சென்றால்கூட அவனை ஆட்சியிலிருந்து நீக்க வேண்டிய பொறுப்பும்மக்களுக்குக்கிடையாது. மன்னன் இட்டதே சட்டம். அவனை விரோதிப்போரை எந்த முறையிலும் தண்டிக்க மன்னனுக்கு அதிகாரம் உண்டு. ஆகவே ஹாப்ஸ் தன்னுடைய சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டில் மன்னனுடைய சர்வாதிகாரத்திற்கு ஆதரவாக தோள் கொடுக்கிறார். இனி லாக்கின் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டைப் பார்ப்போம்.

(அடுத்த இதழில்)

# இருண்ட கண்டத்தில் ஓர் ஒளி!

ஆப்பிரிக்கா என்றால், இருண்ட கண்டம்; இருண்ட கண்டம் என்றால், ஆப்பிரிக்கா என்ற நிலையான இடத்தை வரலாற்றிலே பெற்று, இருள் அடர்ந்த கண்டமாக —அடிமையிருள் சுப்பிய நாடாக— ஆதிக்கவாதிகளின் அதிகாரத்துக்கும், ஆணவத்துக்கும் அடிபணிந்த நாடாகத் திகழ்ந்த தென் ஆப்பிரிக்காவிலே இன்றைய தினம் இளங் கதிரோனின் எழுச்சியையும், அவ்வெழுச்சியில் எழுந்த ஒளிக்கதிரையும் காணமுடிகிறது. அடிமை கொண்ட ஆதிக்கவாதிகள் தங்கள் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டிருக்கும் எதேச்சாதிகாரிகளின் சாய்ந்துபடும் காலம் இது.

கடந்தகால அரசியல் நிகழ்ச்சிகளையும், வரலாற்று நூல்களையும் புரட்டிப்பார்த்தால், ஆணவ விளிம்பிலே நின்றுகொண்டு காட்டாட்சி நடத்திய காவலர்கள் கடலிலே கரைக்கப்பட்ட பெருங்காயம்போல், எழுந்துவிட்ட மக்கள் சக்திக்கு முன்னே—ஆர்த்தெழுந்து ஆவேசக் குரல் கொடுத்தவர்கள் மத்தியிலே—அடிமை வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்துப் புதுவாழ்வு காணத் தலைப்பட்ட தன்மானப்படைகளுக்கிடையிலே—மடிந்துபட்ட கதைகள் ஒன்றல்ல; இரண்டல்ல! ஆயிரமாயிரம் என்பதை அறிந்துகொள்ள இயலும். புவியாண்டவர்கள் புதர்நோக்கி ஓடி ஒளிந்த காட்சிகளைக் காணமுடியும்! ஆட்டிப்படைக்கப் பிறந்தவர்கள் நாம் என்ற மமதை மக்கி மடிந்து மண்மேடாகிய வரலாறு தெரியும்! காலத்தின் கடுகிய ஓட்டத்தில் ஞாலம் கண்ட இவ்வுண்மைகளுக்கு அளவில்லை. அத்துணை நிகழ்ச்சிகளும், தோன்றி மறையும் கதிரவன் போல் தோன்றி மறைந்திருக்கின்றன! தென் ஆப்பிரிக்கா கண்டமும் இந்நிகழ்ச்சிகளுக்கு விதிவிலக்கல்ல, விட்டு விலகி நெடுந்தூரம் சென்றிட!

இருண்ட கண்டத்தில் தங்கள் இரும்புப்பிடியை இறுக்கிக்கொண்டு எக்காளமிட்ட ஏகாதிபத்தியத்தின் இடுப்பொடித்து. "இறுமாப்பிலே ஏமாந்து கிடக்கும் எத்தர்களே! எங்கள் வாழ்வைச் சூறையிட்டுப் பெருவாழ்வு கொண்டிருக்கும் கொடியவர்களே! வஞ்சிக்கப்பட்ட எங்கள் நெஞ்சம் குமுறுகிறது; கொந்தளிக்கிறது; அனல்போல் ஆகிவிட்டது! பாரீர் அதன் பலனை! அறிந்துகொள்வீர் உங்கள் அடக்குமுறையும், அதிகார மமதையும்,

எ. கலைமுகிலன்

அலட்சிய நிலையும் உருவாக்கி இருக்கும் ஒப்புயர்வற்ற நிகழ்ச்சியை! காலமெல்லாம் காட்டாட்சித் தர்பார் நடத்துகின்றவர்களே! எங்கள் இதயக் கனலை — குமுறலைக்! காணீர்! காணீர்!!" என்று முழக்கமிட முன் வந்தனர், தென் ஆப்பிரிக்காவின் இன்றைய விடிவெள்ளிகளாய் — வருங்கால வரலாற்று ஏடுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய வெற்றி வீரர்களாய்த் திகழும் ஜூலியஸ் நியாரர், டாக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டா, ஜோமோ கென்யாட்டா, குவாமே என்குருமா, அநியாயமாகக் கொல்லப்பட்ட பெட்ரிஸ் லுமும்பா போன்றவர்கள்! அதன்பலன்தான் இருண்ட கண்டத்தில் ஆணை பரப்பிப் பரவசமுற்றிருந்த ஐரோப்பியர்கள் வந்தவழி நோக்கி ஓடவேண்டிய நிலை!

'நரிக்கு ஒரு ஆடு கொடுத்தால் கிடைக்கு ஒரு ஆடு கேட்கும்' என்பதுபோல் "வணிகம்" என்ற பெயரைச் சொல்லி, 'வாழ்வு தருகிறோம்' என்ற ஆசை வார்த்தையைக்கூறி, நாட்டைப் பிடித்துத் தங்கள் ஏக போக விளையாட்டுக்கு — வஞ்சக வலையை விரித்துவிட்ட ஏகாதிபத்திய வாதிகளுக்கு அபாய அறிகுறியாகவும், தம்நாட்டுப் பற்றும், தளையுடைக்கும் தணியாவேட்கை கொண்டவர்களுக்கு கலங்கரை விளக்கமாகவும் திகழ்ந்தவர்தான் ஜோமோ கென்யாட்டா! ஜோமோ கென்யாட்டா ஏகாதிபத்தியவாதிகளின் பார்வைக்குத் தணியாத் தணலாகத் தென்பட்டார்; நாட்டின் விடுதலை வீரர்களுக்கோ தென்றலாகத் திகழ்ந்தார்! ஆதிக்க வர்க்கத்திற்கோ அனலாக இருந்தார்; அடிமை விலங்கொடிக்கக் கிளம்பியவர்களுக்கோ அமைதிச் சுடராக இருந்தார்! ஆட்சிப்பீடத்துக்கு அவர் அபாயச் சங்கு; உரிமை முழக்க மெழுப்புவோர்களுக்கோ உண்மைத் தொண்டனானார்! காரிருள் சூழ்ந்த நாட்டில் பேரொளி வீசிட வந்த கதிரவன்போல் ஆனார், ஜோமோ கென்யாட்டா! எனவே, கென்யாட்டாவை விட்டுவைக்க விரும்பவில்லை, காராக்கிரகத்தில் தள்ளிவைத்து உள்ளம் மகிழ்ந்தது ஆட்சிப்பீடம்! எந்த ஆதிபத்தியந்தான் உரிமைக் குரல் எழுப்பும் உத்தகர்களை உலாவ விட்டுத், தங்களுக்கு அழிவைத் தேடிக்கொண்டிருக்கிறது? எட்டு ஆண்டுகள் பாதுகாப்புச் சிறையில்! வைக்கப்பட்டார் கென்யாட்டா பாவம், அந்த எட்டாண்டுகளுக்குள், கொண்ட கொள்கை, உரிமை வேட்கை, விடுதலைத் தாகம் தீர்ந்துவிடும் என்று ஆதிக்கவாதிகள் எண்ணிவிட்டனர் போலும்! எரிக்க

எட்டு நாள் தவணை தந்து, தன் பகுத்தறிவுக் கொள்கையைத் தவறென்று கூறச்சொல்லி, கொடுஞ் சிறையில் வைத்தார்களாமே, புரூனோவை! சுட்டெரிக்கப்படுவோம் என்ற எண்ணத்தில், அச்சத்தால், தன் கொள்கையையா மாற்றிக் கொண்டார் புரூனோ? இல்லையே! தன் இலட்சியத்துக்காக எதையும் இழக்கத் தயாராக-எரியுண்டு மாள, மகிழ்ச்சியோடு இருந்து, எரிக்கப்பட்ட அந்த மாவீரனின் காதை மறைந்தா போய்விட்டது? "நஞ்சைக் குடித்து மடி; இன்றேல், உன் கொள்கையை விட்டுவிடு; மாதா கோயிலுக்கு மண்டியிடு: பாதிரியார்களுக்குப் பாத காணிக்கை செலுத்து" என்றுனுமே, கிரேக்கத் துக்காவலன் கிரீட்டோ! அப்போது நஞ்சைக் குடிக்கவேண்டுமே என்று அஞ்சி, ஆமையாக, ஊமையாக மாறி, மாதாகோயிலுக்கு மண்டியிட்டு, பாதிரியார்களுக்குப் பாத காணிக்கைச் செலுத்திடவா நினைவு கொண்டார், பகுத்தறிவுப் பகலவனும் சாக்ரடீஸ்! இல்லையே! நஞ்செனஅஞ்சாது, அலருது, கொஞ்சமும் நெஞ்சம் விம்மாது, வேதனைகொள்ளாது, மலர்ந்தமுகத்தோடு,மகிழ்ச்சி பொங்கும் இதயத்தோடு நஞ்சை அருந்தி, மகிழ்ந்து, மடிந்துபட்ட மாமேதை சாக்ரடீஸ் வரலாறு தெரியாமல் சிதைந்தா போய்விட்டது? உண்மையான வீரனும் டிரைபஸ், கொடுங்கோலர்களின் கொடுமைக்குப் பலியாகி, நாடு கடத்தப்பட்ட நிலையிலே, அந்த நல்லவனுக்கு வாழ்வளிக்கத் தன்னையே அர்ப்பணிக்க முன்வந்த எமிலிஜோலாவைக் குற்றக்கூண்டிலே நிறுத்திக், குற்றவாளியெனத் தீர்ப்பளித்து, நடுவீதியிலே வைக்கோல்பிரிகளால் கொளுத்தப்பட்டாராமே!கொளுத்துவதற்கு முன்... சாகப்போகிறோமே, என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, உயிரிழக்கச்சம்மதியாது மன்னிப்பா கேட்டார், ஜோலா! அல்லவே! உண்மைக்காக வாதிட்டோம்! உயர் கொள்கைக்காகவாதிட்டோம்! நீதிக்காக வாதிட்டோம், வேகிறோம்! கவலையில்லை! 'என் கடன்' முடிந்தது! என்று முறுவலித்த முகத்தோடு எரிந்து சாம்பலானுர் என்று தானே வரலாறு கூறுகிறது! இவைகளெல்லாம் அந்த ஆதிபத்திய வாதிகளுக்குத் தெரிந்திருக்காது போலும்! அதனுல்தான் எட்டாண்டுகள் என்றனர்! எப்படியோ ஓடிவிட்டன! உறுதி குன்றவில்லை; குறையவில்லை! மனம் தளரவில்லை. மாறவில்லை; மறையவில்லை!புத்துணர்ச்சியோடு, புதுவேகத்தோடு செயலாற்ற இருக்கிருர், எட்டாண்டுத் தண்டனைக்குப் பின்னே! கொண்ட கொள்கைக்காக உயிர் வாழும் அந்த உத்தமரின் வாழ்க்கைச் சுவடி விசித்திரமானது; விந்தையானது!

வீழ்ந்துபட்ட இனத்துக்கு இன்ப வாழ்வும், உரிமை வாழ்வும் தந்திட, ஐரோப்பிய ஆதிக்க வர்க்கத்தை அகற்றிட, விடுதலைபெற தன் நாட்டைக் கண்டிட 'கனவு' கண்ட கறுப்பர் நாட்டு ஒப்பற்ற தலைவராய்த் திகழ்கின்ற ஜோமோ கென்யாட்டா, எந்த ஆண்டு பிறந்தார் என்பது அவருக்கே தெரியாதாம்! ஏறத்தாழ 1893-ம் ஆண்டாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கொள்ளையிட்டுக் குபேர வாழ்வு நடத்திவந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தின் வெறிபிடித்த நிலைமைக்கு—கொள்ளை வாழ்விலே குறுநகை புரிந்து மகிழ்ந்த ஐரோப்பிய ஆணவக் கூட்டத்துக்குச் சுரண்டல் நாடாய்த் திகழ்ந்து வரும் ஆப்பிரிக்காவின் கீழை நாடாம் கென்யா நாட்டிலே, ஏதுமற்றவராக, யாருமற்றவராகச் சுற்றித் திரிந்து, காடுகளையும், மலைகளையும் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையென எண்ணிடும் வகையில், ஆடுமாடுகளை மேய்த்து வாழ வேண்டிய நிலையினராக இருந்தார் தம் பத்தாவது வயது வரை!

பத்து வயதுவரை பட்டபாடும், தாங்கிய தொல்லை துயரங்களும், கொடுமைளும் அவரைத் தப்பியோடிப் பள்ளியிலே பயிலச் செய்தது! சென்ற இடத்தில் இருந்து படித்து முடித்திட அவரென்ன செல்வச் சீமானின் செல்வப் புதல்வனல்லவே! எழுதப் படிக்கத் தெரிந்தது; அதுபோதும் என்று எண்ணினுரோ, என்னவோ, ஒரு வெள்ளைக்காரர் வீட்டிலே வேலைக்கு அமர்ந்தார்!

முள்ளிலேதான் முறுவலிக்கிறது ரோசா! சேற்றிலேதான் மலர்கிறது செந்தாமரை! கொட்டும் ஈக்களின் சேகரிப்பிலேதான் தேன்கூடு தொங்குகிறது! கொடிய நல்லபாம்பின் பல்லிடுக்கிலேதான் மாணிக்கம் இருக்கிறது! அப்படித்தான் கொடியவர்கள் கூடாரமாய்—ஏய்த்துப் பிழைக்கும் எத்தர்தம் கோட்டமாய்—கொள்ளையிட்டு மகிழும் உள்ளம் படைத்தவராய்த் திகழ்ந்த வெள்ளையர்தம் கூடாரத்தை நோக்கி ஓடிய ஜோமோ கென்யாட்டாவை வேலைக்கமர்த்திக்கொண்ட வெள்ளையரின் இதயமும் பண்பட்ட இதயமாக—பக்குவமடைந்த இதயமாக—திறமையைக் கண்டு மதிக்கும் பக்குவம்கொண்ட இதயமாக இருந்தது! ஜோமோ கென்யாட்டாவின் திறமையும், அறிவும், ஆற்றலும், ஆக்கமும் அந்த வெள்ளையரைக் கவர்ந்திட, கணக்கெழுதும்நிலைக்குக்கென்யாட்டாவை உயர்த்தினுர், அந்த வெள்ளைக்காரர்! இது ஜோமோ கென்யாட்டாவுக்கேகூட அதிசயமாகவும், ஆச்சரியமாகவும், வியப்பாகவும், விந்தையாகவும்கூட இருந்திருக்கலாம்! எத்தனையோ இரக்கமற்ற, இரத்தவெறியும், காட்டுமிராண்டித் தனமும் கொண்ட கூடாரத்தின் மத்தியில், திறமைக்கு மதிப்பளித்த அந்த நல்லவரைப்பற்றி எத்துணையோ பல எண்ணங்களை எண்ணியிருந்தாலும், நாம் வியப்பதற்கில்லை!

இப்படிப்பட்ட சூழலுக்கிடையே, பெரும் கொந்தளிப்பும், சூருவளியும் உருவானதுபோல் உரிமை முழக்கமும், விடுதலைத் தாகமும் கொண்டவர்களால் 1922-ஆண்டு "விடுதலைப் போராட்டம் தொடங்கியது! இளமை முதலே அடிமை வாழ்வை வெறுத்தொதுக்கிடத் துடிதுடித்துக் காலத்தை நோக்கிக் காத்திருந்த கென்யாட்டாவுக்கு, விடுதலைப்போர் புத்துணர்ச்சி தந்தது! விடுதலைப் போரிலே தன்னையும் ஓர் அங்கமாக ஆக்கிக்கொண்டார்! அப்படி ஆக்கிக்கொண்டது மட்டுமல்ல, அந்த உரிமைப்போருக்கு மூலகாரணமாகத் திகழ்ந்த "கிக்கியூ" என்ற இயக்கத்தில் ஓர் உறுப்பினராகிப், பின் 1928-ஆண்டு அந்த இயக்கத்தின் ஒப்பற்ற தலைவரானுர்! தன் கருத்தை வலியுறுத்தவும், விடுதலை வீரர்களைத் திரட்டவும், தமது வாதத்துக்கு வலிவு தேடவும், கருத்துக்களை நாடு நகரமறியவும் பத்திரிகையொன்றைத் தொடங்கினுர்.

விடுதலைப் படையின் தலைவராகவும், பத்திரிகாசிரியராகவும் ஆன பின், 1929-ம் ஆண்டு இங்கிலாந்துக்கும், ரஷ்யாவுக்கும் சென்று விட்டு 1931-ம் மீண்டும் இங்கிலாந்திலே இருந்து படிக்க ஆரம்பித்தார்.

வாய்ப்பும் வசதியும், வளமும்' செல்வச் செழிப்பும் அற்ற கென்யாட்டா, தமக்குத் தேவையான பணத்தைத் தாமே வேலைசெய்து தேடிக்கொள்ளவேண்டியவரானுர். தமது கருத்துக்களை வற்புறுத்திச் சில நூல்களை எழுதினுர்!

கலைஞர்களால் அரசியல் அழிகிறது; ஒழிகிறது; நலிகிறது; நாசமாகிறது; சிதைகிறது; சீரழிகிறது என்கிற எண்ணம் கென்யாட்டாவுக்கு இல்லை! அவரே ஒரு நடிகர்! “ஆற்றுமணல்” என்ற திரைப்படத்தில் நடித்திருக்கிறார்!

1946-ம் ஆண்டு தன்சொந்தநாடாம் கென்யா வந்தடைந்த கென்யாட்டா தன்நாட்டு மண்ணைத்தொட்டு முத்தமிட்டார் என்றால், அவரதுநாட்டுப் பற்றை என்னென்று எழுத இயலும்! “என் நாடே உன்னைத்தொட்டு வணங்குகிறேன்! நீயோ அடிமை நிலையிலே இருக்கிறாய்! இருந்தாலும் எனக்கு உடல், உயிர், பொருள் அனைத்தும் நீ! உன் விலங்குகள் உனைவிட்டோட, அடக்குமுறை அகல, அதிகாரம் தூள்தூளாக என்னை நான்ஒப்படைத்துவிட்டேன்! அடிமையுற்ற என்நாடே! இன்று நீ அடிமைதான்; ஆனால், காலத்தின் கடுகிய ஓட்டத்தில், நாளை...நீ சுகந்திரநாடு! விடுதலை பெற்றபூமி! ஆம்! வலிமைமிக்க எழுதுகோல் இருக்கிறது! உனை என்றும் மறவாத மறவர் படையும் ஆங்காங்கே இருக்கிறது! என் உள்ளத்தில் திண்மையும், தளராத தன்னம்பிக்கையும் தங்கிப் பொங்கிக்கொண்டிருக்கிறது! உனைக்கண்டவுடனேயே என் உள்ளத்தில் உணர்ச்சி அலைகள் கொப்பளித்துக் கிளம்புகின்றன; நரம்புகள் துடித்துப் புடைக்கின்றன! வீரர் படையைத் திரட்டுவேன்; அடிமை விலங்கை ஒடித்துக் காட்டுவேன்! அந்த நாள் அதிக தூரத்தில் இல்லை; அதை நீ காணத்தான் போகிறாய்! காலம் கணிக்கத்தான் போகிறது! அப்போது உன்னெழில் கண்டு நான் மகிழத்தான் போகிறேன்” என்றுதான் அந்த நேரத்தில் எண்ணி, அந்த மண்ணை முத்தமிட்டிருப்பார்! அதன் காரணமாக “மாவ்மாவ்” என்ற இயக்கம் உருவெடுத்தது! விடுதலை முழக்கமும், காரணகாரிய விளக்கமும் ஆங்காங்கே நிகழ்ந்தபடி இருந்தன! விடுதலைத் தீ சுடர்விட்டு எரியத் தொடங்கிய நேரம்—அடிமை முத்திரையால் அலைக்கழிந்துகொண்டிருந்த மக்கள் மனவெழுச்சிகொண்டு கிளர்ந்தெழுந்துகொண்டிருந்த வேளையிலே 1953-ம் ஆண்டு ஆட்சியாளரின் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டது! “மாவ்மாவ்” இயக்கம் அடக்கி ஒடுக்கப்பட்டது! அடக்கி ஒடுக்கிய ஆட்சிப் பீடம் “மாவ்மாவ்” இயக்கம் “ஓர் பயங்கர இயக்கம்; இரத்தவெறி கொண்டவர்களின் இயக்கம்!” என்ற தவறான—நேர்மைக்கு மாறான—நீதிக்குப் புறம்பான குற்றச்சாட்டைச் சுமத்தியது! அதைத் தவிர வேறு வழியில்லை, அந்த விடுதலை வீரர் கோட்டத்தை அடக்கி ஒடிக்கி மடித்திட!

“பயங்கரவாதிகள்—இரத்த வெறியர்கள்” என்று குற்றம் சுமத்தப்பட்ட “மாவ்மாவ்” இயக்கத்தினர் கடுமையான தண்டனைக்குள்ளானார்கள்! கென்யாட்டா நைரோபி நகருக்கு அப்பால், நெடுந்தூரத்தில் கைதியாக வைக்கப்பட்டார்! அந்த அடக்குமுறையாலும், தண்டனையாலும் தகர்த்திடலாம் அவ்வியக்கத்தை என்றுதான் ஆட்சிப்பீடம் கருதியதுபோலும்! அவர்களுக்கு எப்படித்தெரியும், விடுதலை வேட்கை என்பதுஅடக்குமுறைக்குப் பின்னர் தான் வெற்றிப்பாதையில் விரைந்து நடைபோடும் என்பது!

1953-ம் ஆண்டு முதல் பாதுகாப்புக் கைதியாக வெளியுலகு காணமுடியாதவராக வைக்கப்பட்ட கென்யாட்டா எண்ணியது எண்ணியாங்கெய்தும் திண்ணிய மனத்தினராய் எட்டாண்டு சிறை வாழ்வை நடத்திவிட்டு, 1961-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 14-ம் நாள் விடுதலை செய்யப்பட்டார்!

கென்யா மக்கள், கென்யாட்டா சிறைப்பறவையாக இருந்தபோதும், அவரது கருத்தைத்தான் தங்கள் ஏகோபித்த கருத்தாக வெளியிட்டு, கென்யாட்டாவின்மீது தங்களுக்குள்ள பற்றையும், பாசத்தையும் காட்டிக்கொண்டு வருகின்றனர்!

எட்டாண்டுக்கால சிறைவாழ்வை முடித்துக்கொண்டு வெளிவரும் கென்யாட்டா எந்த ஐரோப்பியர்களால் “பயங்கரவாதி — இரத்த வெறியர்” என்று குற்றஞ் சுமத்தப்பட்டாரோ, அந்த ஐரோப்பியர்களாலேயே புகழப்படுவதும், விடுதலை செய்யப்படவேண்டும் என்று சட்டமன்றத்திலேயே வாதாடுகிறார்கள் என்றால், அதனை என்னென்பது! அன்று தூற்றியவர்கள்தான் இன்றைய தினம் போற்றிப்புகழ்ந்தேத்தி “கென்யாவில் அமைதியை நிலைநாட்டக்கூடிய தலைவர் கென்யாட்டா ஒருவர் தான்!” என்று ஆங்கிலேயர்களாலேயே குறிப்பிடப்படுவது வியப்பாக, விந்தையாக, வேடிக்கையாக இல்லையா! எந்த ஒரு தலைவருக்கும் இல்லாத சிறப்பு, எந்த ஓர் ஆதிக்கமும் தங்களைஎதிர்க்கிற ஓரியக்கத்தின் தலைவனுக்குப் பரிந்து பேசி, தலைவணங்கி விடுதலை செய்யப்பட வேண்டுமென்பதாக வரலாற்றில் இருப்பதாகத் தெரியவில்லை! அந்த அளவுக்குச் சிறப்பிடத்தைப் பெற்றுவிட்டார் ஜோமோ கென்யாட்டா!

கென்யாட்டாவுக்கு அறுபத்துஎட்டு வயது ஆகிறது! தமது இருபத்தொன்பதாவது வயதிலே, அதாவது 1922-ம் ஆண்டிலே எழுந்த விடுதலைப் போராட்டம் 1961-ம் ஆண்டிலே கென்யா நாட்டுக்கு விடுதலை பெற்றுத்தர இருக்கிறது! ஏறத்தாழ 39 ஆண்டுகாலக் குமுறல் அடங்குவதற்கு 1961-ம் ஆண்டு இறுதி ஆண்டாக இருக்கும் என உலகமே எதிர்நோக்குகிறது! கென்யாட்டாவின் “கனவு” நனவாகும் சூழ்நிலைகள் உருவாகி, அதன் ஒளிச் சிதறல் விரைவில் கென்யாவெங்கும் பிரகாசிக்க இருக்கிறது!

கென்யாட்டா, ஏறத்தாழ 2 இலட்சத்து 25ஆயிரம் சதுர மைல்களையும் 68 இலட்சம் மக்களையும் கொண்ட கென்யாவின் ஒப்புயர்வற்ற ஒரே தலைவர்! அவர் சொல்தான் கென்யாவின் ஏகோபித்த சொல்! அத்தகு ஆற்றல் மறவரின் எண்ணம் விரைவில் ஈடேறி, கென்யா விடுதலை பெறுவதாக! வாழ்க கென்யாட்டா! வெல்க அவர்தம் முயற்சி!!

கென்யாவோடு திராவிடத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், திராவிடநாடு மக்கட் தொகையிலும் சரி, வளத்திலும் சரி, நிலப்பரப்பிலும் சரி, நாகரிக வாழ்விலும் சரி—பல துறைகளிலும் தலைசிறந்து விளங்கும் ஒரு நாடாகும்.

விடுதலை பெற்றுத் தனியாட்சி நடத்தக்கூடிய வாய்ப்பினை எல்லாத் துறைகளிலும் பெற்றிருந்தும், ஆட்சிப் பொறுப்பில் இருப்போர்; “இதெல்லாம் நடக்கிற காரியமா? திராவிடநாடாம்! தனியாகப்பிரிந்து ஆட்சிநடத்துவதாம்” என்று கேலிக் குரல் எழுப்புகின்றனர்.

ஆனால், திராவிடம் கென்யா ஆகும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பதைக் காலம் உறுதிப்படுத்தத்தான் போகிறது.

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# குற்றமற்ற கைதி

—[ எம். எஸ். சின்னுசாமி ]—

என்னுடைய உடல் கூனிவிட்டது. என்னுடைய மயிர்கள் நரைத்துவிட்டன. என்னால் இப்பொழுது நடக்கக்கூட வலிமையில்லை. என்னை இப்பொழுது "வெளியேபோ" என்கிறார்கள். நான் குற்றவாளி இல்லை என்று இப்பொழுது கூறுகிறார்கள். நேற்றுவரை குற்றவாளி, இன்று நல்லவன்! பத்துவருடங்கள் என்னைச் சிறையிலே வாட்டிவிட்டு இன்று குற்றவாளி இல்லை என்கிறார்கள். இதற்காக அரசாங்கம் என்னிடம் மன்னிப்புக்கூடக் கேட்கவில்லை. நான் அதிர்ஷ்டசாலியாம் பத்து வருடங்கள் கவலையில் மெலிந்துவிட்ட நான் அதிர்ஷ்டசாலியாம். கருத்திருந்த என் மயிர்கள் வெளுக்கும்வரை சிறையிலிருந்த நான் அதிர்ஷ்டசாலியாம்.

என்னுடைய வாழ்க்கையின் இன்பப் பகுதி முழுவதும் சிறையிலேயே கழித்துவிட்டேன். என் தாயின் அன்புமுகம் அழுதுகொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். என்னை இவர்கள் சிறைக்கு அழைத்துவரும்போது என்தாய் அவர்களிடம் அழுதாள். "என் மகன் கொலையில் ஈடுபடவே இல்லை" என்று கதறினாள். என் மனைவி என் அன்புக் குழந்தைகள் இருவரையும் அணைத்துக்கொண்டு கதறிக்கதறி அழுதாள். அரசாங்கம் அன்று என்னை நம்பவில்லை. கொலைகாரன் என்றுகுற்றம் சாட்டி என்னைச் சிறையில் அடைத்தனர். இப்பொழுது என்னைச் சிறை அடைத்துவிட்டதாகக் கதைக்கின்றனர்.

என் தாய் சிறையில் என்னைப் பார்க்கவந்தாள். என்னைக் கண்டதும் வாய்விட்டே அலறிவிட்டாள். என் இளைய மகள் இறந்துவிட்டாளாம், என் மகனும் மனைவியும் மரணப்படுக்கையில் இருக்கின்றார்கள் என்று கூறினாள். சோற்றுக்கு வழியில்லை என்றாள். நான் வரும்பொழுது இருந்த பணம் எல்லாம் செலவழிந்துவிட்டது. ஏதோ சிறிது வைத்துவிட்டுவந்தேன். நான் வெளியேயிருந்தால் எப்படியும் முன்னேறி இருப்போம். இப்பொழுது என்னசெய்வது? சிறிது நேரம் இருவரும்கூடி அழுதோம். அதைத் தவிர நாங்கள் என்ன செய்ய முடியும்!

அன்று இரவு என்னால் அமைதியாக இருக்கமுடியவில்லை. தப்பித்துச் செல்வோமா! என்றுகூட நினைத்தேன். தப்பித்துச் சென்று மட்டும் அவர்களைக் காப்பாற்ற முடியுமா? முடியாது. அன்று இரவு முடிந்தது. அடுத்தநாள் பகல் ஒரு மணிக்கு என் மனைவியும் மகனும் ஒருவர்பின் ஒருவராக இறந்துவிட்டதாகச் செய்திவந்தது. அவர்களை நினைத்து அழுதேன். என் நண்பர்களும் என்னோடு சேர்ந்துகொண்டார்கள். அவர்கள் எனக்கு ஆறுதல் கூறினார்கள். என்னால் எப்படி அமைதியாக இருக்கமுடியும்?

மறுநாள் என்னை வேறொரு சிறைக்கு மாற்றிவிட்டார்கள். அப்பொழுது புகைவண்டியில் என்னை விலங்கிட்டு அழைத்துச் சென்றார்கள். வழியில் என் குடும்பத்தினரின் புதைகுழியைக் கண்டு கண்ணீர்விட்டேன். என்னைக் கண்ட மக்கள் பயந்து விலகினர். அது எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. அப்பொழுது என்னைத் தைரியசாலி என்று நினைத்துக்கொண்டேன்.

நான் முதலில் இருந்த சிறையைவிட இப்பொழுது வந்த சிறை நன்றாக இருந்தது. அங்கு இருந்த நண்பர்கள் என்னோடு நெருங்கிப் பழகினார்கள். கொலை செய்த நண்பர்கள், என்னிடம், எப்படிக் கொலை செய்வது என்பதை விளக்கினார்கள். 'பிட்பாக்கெட்' அடிப்பவர்கள். எனக்கு அதைக் கற்றுக்கொடுத்தார்கள். அங்கு நான் பலவற்றைக் கற்றுக்கொண்டேன். ஒரு நாள் என் தாய் இறந்துவிட்டதாகக் கடிதம் வந்தது. அது யாரால் எழுதப்பட்டது என்று தெரியவில்லை. ஆனால், அந்தக் கடிதம் என்னை மலைக்கச் செய்துவிட்டது. அன்று அரசாங்கத்தின்மேல் வந்த கோபத்தில் வார்டரைக்கூட அடித்துவிட்டேன். அதனால் ஒரு நேர உணவு குறைந்துவிட்டது. என் நண்பர்கள் மாறி, மாறி வந்தார்கள். அவர்கள் எல்லாவற்றையும் கற்றுக்கொடுத்தார்கள். இன்று என்னை வெளியேறச் சொல்கிறார்கள். நான் வெளியேற மறுத்தாலும், வெளியேற்றத் தயாராயிருக்கிறார்கள். நான் எங்கு செல்வது என்பது முக்கியமல்ல. யாருக்காகச் செல்வது என்பதுதான் முக்கியம். சிறையில் நண்பர்கள் நிறைய உண்டாகிவிட்டார்கள். அவர்களை விட்டு என்னால் பிரியமுடியவில்லை. இருந்தாலும் விரைவில் வந்துவிடலாம் என்று நினைத்து வெளியேறுகிறேன். கெட்டவனை நீதி தண்டிக்கலாம். அவன் அதனால் திருந்துவதில்லை. ஆனால், என்னைப்போன்ற நல்லவர்கள் தண்டிக்கப்பட்டால் அவர்கள் கெட்டவர்களாகத் திருத்தப்படுகிறார்கள். இதனால் கெட்டவர்களும், கெடுமதியாளரும் நாட்டிலே அதிகரிக்கிறார்கள். சிறை என்றால், கெட்டவர்களைக், கொடியவர்களைச் சீர்திருத்தும் இடம் என்று பொருள்பட அதற்குப் (Penitentiary) என்ற பெயர் வைத்துள்ளார்கள். ஆங்கிலச் சொல்லான இந்தப் 'பெனிட்டன்சரி'க்கு சீர்திருத்தம் செய்யும் இடம் என்று பொருளாம். ஆனால், இங்கு நான் வதியும் சிறையில் நல்லவன் கெட்டவனாக ஆக்கப்படுகிறான். கொலை செய்வது எப்படி? திருடுவது எப்படி என்று இங்குள்ள கைதிகள் கற்றுத் தருகிறார்கள்.

அரசாங்கத்தின் எண்ணம் மாற்றியமைக்கப்பட்டால் நாட்டில் கெட்டவனும் மாறுவான். அரசாங்கத்தில் நீதியும், நேர்மையும் நிலைக்கவேண்டும் என்பதாலேயே இதைச் சொல்கின்றோம்.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.